# வந்தே லோககுரும்

*தக்ஷிணாம்நாய சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடாதீச்வர ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின் திவ்ய ஸப்ததி (70 – ஆவது) வருடம் நிறைவடைந்த சந்தர்பத்தில் நிகழ்ந்த மஹோத்ஸவத்தின் போது அவர்களின் கரகமல ஸஞ்ஜாதரான*

*ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்கள் தமது குருநாதரின் மஹிமைகளைப் பற்றி செய்தருளிய அருளுரை மற்றும் "குருவர்ய தச சுலோகீ ஸ்தோத்திரம்"*

**ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய மஹாஸம்ஸ்தானம்**

**தக்ஷிணாம்நாய ஸ்ரீ சாரதாபீடம், சிருங்கேரி**

WWW.SRINGERI.NET

**Vande Lokagurum (Tamil)** - *Anugraha Sandesha delivered in Sanskrit by Jagadguru Sri Sri Sri Vidhushekhara Bharati Mahaswamiji on the occasion of the Divya Saptati Poorti Mahotsava (71st Vardhanti) of Dakshinamnaya Sringeri Sharada Peethadhishwara Jagadguru Shankaracharya Sri Sri Sri Bharati Tirtha Mahaswamiji*

| | | |
|---|---|---|
| ***Printed at*** | : | *Vidya Bharati Press*<br>*Shankarapuram, Bangalore 560004*<br>*(an in–house publication wing of Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri 577139)* |
| ***First Edition*** | : | *2025 (5000 copies)* |
| ***Contribution Value*** | : | ₹ *40/-* |
| ***Designed by*** | : | *Sri Shankara Advaita Research Centre, Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri* |

*This book is distributed at a highly subsidised value for the sustenance and propagation of Sanatana Dharma, and to reach all sections of the society. The contribution value received for this book is used for charitable purposes.*

| | | |
|---|---|---|
| ***Copies Available at*** | : | *Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri* |
| ***Email*** | : | *adminoffice@sringeri.net* |


WWW.SRINGERI.NET

# விஷயானுக்ரம:


१ ஸத்குருவின் லக்ஷணங்கள் ........................ १

२ நற்குலத்தில் பிறந்தவர் ........................ ८

३ ஶுத்3த4பா4வ: ........................ १३

४ ஜிதேந்த்3ரிய: ........................ १६

५ ஸர்வாகமானாம் ஸாரஜ்ஞ: ........................ २०

६ ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வவித் ........................ २४

७ பரோபகார நிரத: ........................ ४०

८ ஜப பூஜாதி தத்பர: ........................ ४४

९ அமோகவசன: ........................ ४७

१० சாந்த: ........................ ४ ९

११ வேத வேதாங்க பாரக: ........................ ५ १


WWW.SRINGERI.NET

१२ யோகமார்கானுஸந்தாயீ ........................................ ५६

१३ தேவதா-ஹ்ருதயங்கம: ........................................ ५८

१४ கு₃ருவர்யத₃ஶஶ்லோகீ ........................................ ६२

WWW.SRINGERI.NET


# ஸத்குருவின் லக்ஷணங்கள்

***ஶாஸ்த்ராப்3தி4பாரத்3ருஶ்வானம் ஸங்க3ஹீனம் தபோநிதி4ம் |***
***ப4ஜே ஶ்ரீபா4ரதீதீர்த்த2கு3ரும் ப4க்3ரௌக4தா3யகம் ||***

*பரமசிவனின் அவதாரமான ஜகத்குரு ஶ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள், சுமார் 1200 வருடங்களுக்கு முன் பாரதநாட்டின் கேரள மாநிலத்தில் பூர்ணாநதியின் தீரத்தில் காலடி என்னும் கிராமத்தில் ஆர்யாம்பா மற்றும் சிவகுரு என்ற புண்ய தம்பதிகளுக்கு புத்திரராக அவதரித்தார். அவர் தமது எட்டாவது வயதிலேயே எல்லா வேதங்களையும் கற்றறிந்தார். தமது 12-வது வயதிலேயே எல்லா சாஸ்திரங்களையும் கற்றுத்தேர்ந்தார். தமது தாயின் உத்தரவைப்பெற்றுக் கொண்டு நர்மதா நதிக்கரையில் தவம் செய்து கொண்டிருந்த ஜகத்குரு ஶ்ரீகோவிந்த பகவத்பாதரை குருவாக வரித்து அவரை ஆச்ரயித்தார். அவரிடமிருந்து ஸன்னியாஸம், பிரணவம் மற்றும் மஹாவாக்யங்களின் உபதேசம் முதலியவற்றைப் பெற்றார். பின் ஜகத்குரு ஶ்ரீமத் கோவிந்தபகவத்பாதரின் உத்தரவின் பேரில் பதரி க்ஷேத்திரத்திற்குச் சென்று பிரஸ்தானத்ரயம் என்று பிரஸித்தியடைந்துள்ள பகவத்கீதை, பத்து உபநிஷத்துக்கள் மற்றும் பிரஹ்மசூத்திரங்களுக்கு பாஷ்யங்கள் என்னும் மிகச்சிறந்த மற்றும் தெளிவான விளக்கங்களை இயற்றினார். இவை பண்டிதர்களுக்கு மிகவும் பிரியமானவை மற்றும் அழியாத் தன்மையுள்ளவை. இந்த பாஷ்யங்களின் மூலம் அனைத்து சுருதி, ஸ்ம்ருதி, புராண இதிஹாஸங்களின் உட்கருத்தாக அமைந்திருப்பது அத்வைதமே என்பதை விளக்கினார். அவ்வாறே வேதாந்த சாஸ்திரத்தின் பிரகரணகிரந்தங்களான உபதேசஸாஹஸ்ரி விவேகசூடாமணி முதலானவற்றை எழுதினார். மேலும் கணேசபஞ்சரத்தினம், ஸௌந்தர்யலஹரீ, சிவானந்தலஹரீ முதலான ரமணீயமான ஸ்தோத்திரங்களையும் இயற்றினார். பின் பாரத தேசம் முழுவதும் மூன்று முறை கால்நடையாக ஸஞ்சரித்து, வேதத்திற்கு எதிரான கொள்கைகளிலுள்ள குற்றங்களை எடுத்துக்கூறி அதை பின்பற்றுபவர்களை*

WWW.SRINGERI.NET

தமது சிறந்த வாதங்களால் வென்று நல்லுபதேசம் செய்து ஸநாதன வைதிக தர்மத்தையும் அத்வைத ஸித்தாந்தத்தையும் எங்கும் பரப்பினார். காஷ்மீரில் ஸர்வஞபீடத்தில் அமர்ந்தருளினார். எல்லாக் காலங்களிலும் ஸநாதன தர்மமானது பிரசாரத்தில் இருப்பதற்காக பாரதத்தின் கிழக்கு, தெற்கு, மேற்கு மற்றும் வடக்கு என்ற நான்கு திசைகளில் புரி, சிருங்கேரி, துவாரகா மற்றும் பதரி க்ஷேத்திரங்களில் முறையே கோவர்தன பீட,ம், சாரதா பீடம், காளிகா பீடம், ஜ்யோதிஷ் பீடம் என்ற பெயர்களில் நான்கு ஆம்நாய பீடங்களை ஸ்தாபித்தார். அவற்றில் தங்களுடைய சிஷ்யர்களில் முக்கியமானவர்களான



ஹஸ்தாமலகாசார்யாள், சுரேச்வராசார்யாள், பத்மபாதாசார்யாள் மற்றும் தோடகாசார்யாளை முறையே இந்த நான்கு பீடங்களில் அதிபதிகளாக நியமித்தார். பின் தமது 32-வது வயதில் கேதார க்ஷேத்திரத்திற்குச் சென்று, சிஷ்யர்கள் எல்லோரையும் அனுக்கிரஹித்த பின் அங்கிருந்தே கைலாஸத்தை அடைந்து தமது அவதாரத்தை நிறைவு செய்தார்.

ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கராசார்யாள் பாரதத்தின் தெற்குத் திசையில் சிருங்கேரி

WWW.SRINGERI.NET

க்ஷேத்திரத்தில் தக்ஷிணாம்நாய சாரதாபீடத்தை ஸ்தாபித்து, தமது நான்கு சிஷ்யர்களில் ஒருவரான ஜகத்குரு ஸ்ரீமத் சுரேச்வராசார்யாளை இப்பீடத்தின் முதல் அதிபதியாக நியமித்தார். ஞானத்திலும் பாண்டித்தியத்திலும் முதன்மையானவரான இவர் வயதில் மூத்தவராவார். வேதாந்த சாஸ்த்திரத்தின் வார்த்திககாரர் என்று அழைக்கப்படுபவர். இவரைப்போலவே இவருக்குப்பின் இந்தப் பீடத்தின் அதிபதிகளாக விளங்கிய ஜகத்குரு மஹாஸ்வாமிகள் அனைவரும் அதிசயிக்கத்தக்க மஹிமைகள் உள்ளவர்களாக விளங்கினார்கள். அவர்களில் யோகிகளில் தலைசிறந்தவரான ஜகத்குரு ஸ்ரீ வித்யாதீர்த்தர், விஜயநகர ஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தும், நான்கு வேதங்களுக்கும் பாஷ்யம், சங்கரதிக்விஜயம், பஞ்சதசீ முதலான அரிய நூல்களை இயற்றியும் நாட்டிற்கு பேருதவி செய்த ஜகத்குரு ஸ்ரீ வித்யாரண்யர், இன்றைய திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த குன்னுவாரன்கோட்டையில் அவதரித்து பின்னர் இப்பீடத்தில் அதிபதியாக பொறுப்பேற்று தலைசிறந்த பண்டிதராக விளங்கியதோடல்லாமல், அரசர்கள், ஏழை, எளிவர்கள் என அனைவருக்கும் அருள்செய்த ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்தபாரதீ, உக்ரமான தவத்தால் சக்திகள் பல பெற்ற ஜகத்குரு ஸ்ரீ ந்ருஸிம்ஹபாரதீ , "அபினவ சங்கரர்" என்று அழைக்கப்பட்டு ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரருக்கு சமமாக நாட்டிற்கு அருள்செய்து சங்கராசார்யாளின் ஜன்மபூமி க்ஷேத்திரமான காலடியைக் கண்டுபிடித்து அங்கு அவருக்கு சிறந்த கோவிலை நிர்மாணித்த ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபினவ ந்ருஸிம்ஹபாரதீ, ஜீவன்முக்தராக விளங்கியதோடல்லாமல் விவேகசூடாமணிக்கு ஒப்பற்ற விளக்கவுரை செய்த ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரபாரதீ, யோகிகளில் மாணிக்கமாக விளங்கியதுடன் பலமுறை பாரத நாடுமுழுவதும் ஸஞ்சாரம் செய்து தர்மத்தை அனைத்து மக்களுக்கும் போதித்த ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர் முதலான அளவற்ற மஹிமைகள் பொருந்திய ஜகத்குரு மஹாஸ்வமிகளால் அலங்கரிக்கப்பட்ட இந்த சிருங்கேரி சாரதாபீடமானது இன்றும் அவிச்சின்னமாக தொடர் சங்கிலி போல இருக்கும் குருபரம்பரையுடன் விளங்கிவருகிறது. பாரதத்தில் தென்திசையில் ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கராசார்யரால் தென்னிந்தியாவிலுள்ள மக்கள்அனைவருக்காக சிருங்கேரியில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரேபீடாமான இந்த தக்ஷிணாம்நாய ஸ்ரீசாரதாபீடத்தின் அதிபதிகளான ஜகத்குரு மஹாஸ்வாமிகள் அனைவரும் அனைத்து சாஸ்திரங்களிலும் கரைகண்டவர்கள், தவத்திற்சிறந்தவர்கள், சுருதி மற்றும் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட ஆசார நியமங்களைக் கடைப்பிடிப்பதில் தன்னிகரற்றவர்கள், தினமும் பகவான் சந்திரமௌளீச்வரரையும் மற்றும் பகவதீ சாரதாம்பாளையும் சிறப்பாக பூஜித்து ஆஸ்திகர்கள் அனைவரின் யோகக்ஷேமத்தைப் பிரார்த்திப்பவர்கள். ஞானவேட்கை உள்ளவர்களுக்கு அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ப

WWW.SRINGERI.NET

தர்மதத்துவம் மற்றும் பிரஹ்ம தத்துவங்களை போதிப்பவர்கள். மேலும் உலக மக்களனைவரின் வந்தனைக்குரியவர்களாக விளங்கிவருகிறார்கள்.

ஜகத்குரு ஸ்ரீசங்கர பகவத்பாதாசார்யாள் தமது விவேகசூடாமணீ என்ற நூலில்

***து$_3$ர்லப$_4$ம் த்ரயமேவைதத் தை$_3$வானுக்$_3$ரஹஹேதுகம் |***
***மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷஸம்ஶ்ரய: ||***

என்று உபதேசித்தார். “இப்பிரஞ்சத்தில் மனுஷ்யத்வம் என்றால் மனிதப்பிறவி, முமுக்ஷுத்வம் என்றால் முக்தி அடையவேண்டுமென்று இச்சித்தல், மஹாபுருஷஸ்ம்ச்ரய: என்றால் உலகிற்கு உதவுவதற்காகவே அவதாரம் செய்த மற்றும் தெய்வீகத் தன்மைபொருந்திய மஹாத்மர்களின் அருள், என்ற இம்மூன்று பொருள்கள் மிகவும் அரிதானது. இது பகவானின் அருள் மற்றும் பிறவிகள் பலவற்றில் செய்த நற்செயல்களின் பயனாலன்றி அடைவதற்கரியது.” என்பது இந்த சுலோகத்தின் பொருள்.

பிறவிகள் பலவற்றில் செய்த நற்செயல்களின் விளைவால் மனிதப்பிறவியும் முமுக்ஷுத்வமும் கிடைதாலும் கூட முக்தி மார்கத்தை உபதேசம் பண்ணக்கூடிய ஸத்குரு கிடைப்பது மிகவும் அரிதானது. மோக்ஷமடைவதற்கு பிரஹ்ம ஞானம் பெறவேண்டும். பிரஹ்ம ஞானம் அடைவதற்கு பிரஹ்ம விசாரம் செய்யவேண்டும். விசாரத்தின் பொருளான பிரஹ்மத்தை அறிவது மிகவும் கடினமானதால் குருவில்லாமல் அதைச் செய்ய இயலாது. ஆகையால் பிரஹ்மவிசாரத்திற்காக பிரஹ்மத்திலேயே நிலைத்திருக்கும் குருவை அடைக்கலம் புகவேண்டும்.

ஆகையால் தான் வேதம்

***பரீக்ஷ்ய லோகான்கர்மசிதான்ப்$_3$ராஹ்மணோ***
***நிர்வேத$_3$மாயான்னாஸ்த்யக்ருத: க்ருதேன |***
***தத்$_3$விஜ்ஞானார்த$_2$ம் ஸ கு$_3$ருமேவாபி$_4$க$_3$ச்சே$_2$த்ஸமித்பாணி:***
***ஶ்ரோத்ரியம் ப்$_3$ரஹ்மநிஷ்ட$_2$ம் ||***

(முண்ட$_3$கோபநிஷத் – 1.2.12)

என்றும்,

***உத்திஷ்ட$_2$த ஜாக்$_3$ரத ப்ராப்ய வராந்நிபோ$_3$த$_4$த |***
***க்ஷுரஸ்ய தா$_4$ரா நிஶிதா து$_3$ரத்யயா து$_3$ர்க$_3$ம் பத$_2$ஸ்தத்கவயோ வத$_3$ந்தி ||***
***(கடோ$_2$பநிஷத் – 1.3.14)***

என்றும் உபதேசிக்கிறது.

பகவத்கீதையும்

***தத்$_3$வித்$_3$தி$_4$ ப்ரணிபாதேன பரிப்ரஶ்னேன ஸேவயா |***
***உபதே$_3$க்ஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ்ஞானினஸ்தத்த்வத$_3$ர்ஶின: || (4.34)***

என்று குருவை அண்டியே பிரஹ்மவிசாரம் செய்யவேண்டும் என்று உபதேசிக்கிறது. அப்படிப்பட்ட பிரஹ்மவிசாரம் தான் பயனளிக்க வல்லதாகும். ஆனால் அப்படிப்பட்ட மஹிமைகள் பொருந்திய குருவை அடைக்கலம் புகுவதென்பது பிறவிகள் பலவற்றில் நற்செயல்களையே செய்த சிலருக்கே கிடைக்கின்றது. ஆகையால் தான் மஹாபுருஷஸ்ம்ச்ரய: என்பது மிகவும் அரிதானது என்று பகவத்பாதாள் உபதேசித்தார். யார் மஹாபுருஷர்? அவருடைய லக்ஷணங்கள் என்ன? என்பதற்கு சாஸ்திரத்தில் சொல்லப்பட்டதென்னவென்றால்,

***மாத்ருத: பித்ருத: ஶுத்$_3$த$_4$: ஶுத்$_3$த$_4$பா$_4$வோ ஜிதேந்த்$_3$ரிய: |***
***ஸர்வாக$_3$மானாம் ஸாரஜ்ஞ: ஸர்வஶாஸ்த்ரார்த$_2$தத்த்வவித் ||***

***பரோபகாரநிரதோ ஜபபூஜாதி$_3$தத்பர: |***
***அமோக$_4$வசனஶ்ஶாந்தோ வேத$_3$வேதா$_3$ங்க$_3$பாரக$_3$: ||***

***யோக$_3$மார்கா$_3$னுஸந்தா$_4$யீ தே$_3$வதாஹ்ருத$_3$யங்க$_3$ம: |***
***இத்யாதி$_3$கு$_3$ணஸம்பன்னோ கு$_3$ருராக$_3$மஸம்மத: ||***

என்று இந்த லக்ஷணங்கள் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவரே ஸத்குரு என்று சொல்லப்பட்டுள்ளது. பிரஹ்மவிசாரத்திற்காக நாம் அவரையே



WWW.SRINGERI.NET



அடைக்கலம் புகவேண்டும். ஆனால் இந்த கலியுகத்திலும் மேற்கூறப்பட்ட லக்ஷணங்கள் ஒருங்கே அமையப்பெற்ற ஸத்குருவை நாம் அடையமுடியுமா என்றால், சந்தேகமன்றி நம்மால் அடைய இயலும். தக்ஷிணாம்நாய சிருங்கேரி சாரதாபீடத்தின் 36-வது பீடாதீச்வரரும் எங்கள் குருநாதருமான ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் இந்த லக்ஷணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றவராக நமக்கு அடைக்கலம் அளித்துவருகிறார்கள்.

குருநாதர் அனைத்து சாஸ்த்திரங்களிலும் கரைகண்டவராக தக்ஷிணாம்நாய சிருங்கேரி சாரதாபீடத்தின் 36-வது அதிபதியாகப் பட்டமேற்று,

ஸனாதன வைதிக தர்மத்தையும், ச்ரௌதஸ்மார்த்த ஆசாராங்களையும் ஸம்ரக்ஷணம் செய்துகொண்டு வருகிறார். எல்லா சிஷ்யர்களையும் அனுக்கிரஹித்துக்கொண்டு, ஞானவேட்கை உள்ளவர்களுக்கு அவரவர்களின் தகுதிக்கேற்ப தர்ம தத்துவங்களையும் பிரஹ்ம தத்துவங்களையும் உபதேசிக்கிறார்கள். தினந்தோறும் பகவதீ சாரதாம்பாளையும் பகவான் சந்திரமௌளீச்வரரையும் விசேஷமாகப் பூஜித்து ஆஸ்திகர்கள் அனைவரின் சிரேயஸ்ஸிற்காக பிரார்த்தனை செய்கிறார்கள். உலகோருக்கு பூஜனீயராக விளங்கிவருகிறார்கள்.

WWW.SRINGERI.NET

# நற்குலத்தில் பிறந்தவர்

## *(மாத்ருத: பித்ருத: ஶுத்$_3$த$_4$:)*

*‘ஸத்குருவின் முதலாவது லக்ஷணம் — “மாத்ருத: பித்ருத: ஶுத்$^3$த$_4$:” என்றால் நற்குலத்தில் பிறந்தவர் என்று அர்த்தம். சுமார் 70 வருடங்களுக்கு முன்னால் ஆந்திரபிரதேசத்தின் மசீலிபட்டணமென்ற நகரத்தில் ஸ்ரீமான் தங்கிரால வேங்கடேச அவதானி என்ற பெயருடைய பிராஹ்மணோத்தமர் இருந்தார். அவர் சிறுவயதிலேயே கிருஷ்ணயஜுர்வேதத்தை ஸம்பூர்ணமாகக் கற்று அதன்பின் நல்ல ஆசாரநியமங்களுடன் கிருஹஸ்தாச்ரமத்தை ஏற்று, தமது ஆச்ரமத்திற்கு ஏற்புடைய தர்மங்களை நன்றாகக் கடைப்பிடித்து, இறையருளினால் கிடைக்கப்பெற்ற பொருட்களினாலேயே சந்தோஷமடைந்து, இனிய குணங்களுடன் கூடியவராக அனைவரின் அன்பிற்குப் பாத்திரமாக இருந்தார். அவரின் தர்மபத்தினியான ஸ்ரீமதி*

*அனந்தலக்ஷ்மீ அம்மாள் நற்குணங்களின் களஞ்சியமாவார். இந்த புண்ணிய தம்பதிகளுக்கு நான்கு மகள்கள். ஸ்ரீமான் அவதானி அவர்கள் மசீலிபட்டண நகரத்திற்கு வருவதற்கு முன், குண்டூருக்கு அருகிலுள்ள அலுகுமல்லெபாடு என்ற ஒரு அக்ரஹாரத்தில் வசித்துக்கொண்டு புத்திரப்பேற்றை விரும்பியவராக அங்குள்ள பகவான் பவானிசங்கரேச்வரரை ஓராண்டு காலம் பிரதி தினமும் மிகவும் சிரத்தையுடன் மஹாந்யாஸபூர்வக ருத்ர அபிஷேகத்தினால் சிறப்பாகப் பூஜித்திருந்தார். பிற்பாடு பகவான் அவருடைய பூஜைகளினால் மிகவும் சந்தோஷமடைந்து அவர்களுக்கு அனுக்கிரஹம் செய்தான். ஸ்ரீமதி அனந்தலக்ஷ்மி அம்மாள் கர்ப்பவதியானாள். கர்ப்பமுற்ற பொழுதிலிருந்தே கருவில் இருக்கும் குழந்தையின் தெய்வீகத்தன்மையை தெரியப்படுத்தும் பல அறிகுறிகளை உணரத்தொடங்கினாள். ஒருநாள் தூக்கத்தில் ஒரு கனவு கண்டாள். அதில் பகவான் பால ஆஞ்ஜனேயராக அந்த அம்மாளின் முன் தோன்றி மகிழ்ந்த முகத்துடன் அவளுக்கு மூன்று மாம்பழங்களைக் கொடுத்து,*

WWW.SRINGERI.NET

*"உனக்கு எல்லா நற்குணங்கள் பொருந்திய, உலகனைத்தும் போற்றக்கூடிய புத்திரன் பிறப்பான்" என்றருளி மறைந்தார். அதன் பின், கர வருடத்தின் சைத்திர மாதத்தின் சுக்லபக்ஷத்தில் ஷஷ்டி திதியன்று அனந்தலக்ஷ்மீ அம்மாள் எல்லா ஸத்குணங்களும் ஒருங்கே பொருந்திய, அனைவருக்கும் ஆனந்தத்தை அளிக்கும் புத்திரனைப் பிரசவித்தாள். அக்குழந்தை தன்னுடைய பார்வை ஒன்றினாலேயே அனைவரின் மனதையும் கொள்ளைகொண்டது. அதற்கு "ஸீதாராம ஆஞ்ஜனேய:" என்று பெயரிட்டனர்.*

*ஸீதாராமாஞ்ஜனேய சர்மா சிறுவயதிலேயே ஒரு வினாடி கூட வீணாவதைப் பொறுக்க மனமின்றி எப்பொழுதும் பகவானை ஸ்மரிப்பதிலும், நற்செயல்களைச் செய்வதிலும் காலத்தைச் செலவிட்டு அனைவரின் அன்பிற்கும் பாத்திரமானான். சிறு வயதிலேயே பிழையேதுமின்றி ஸம்ஸ்கிருத மொழியில் பேசுவதன் மூலம் பல பண்டிதர்களையும் ஸம்ஸ்கிருத மொழி ஆர்வலர்களையும் வியப்பில் ஆழ்த்தினான். அதன் பின் ஸீதாராம ஆஞ்ஜனேய சர்மா, உபநயன ஸம்ஸ்காரத்தைப் பெற்று பிரதிதினம் காயத்திரி தேவியை உபாஸிப்பவனாக, வேதங்களை கற்பவனாக, தாய்தந்தையரின் சேவைகளைச் செய்பவனாக இருந்துவந்தான். பின்னர் தனது பதினாறம் வயதில் வேதாத்யயனத்தை முடித்துக்கொண்டு சாஸ்த்திரம் கற்பதில் இச்சையுள்ளவனாக, பகவான் மஹாகாளேச்வரரின் க்ஷேத்திரமான உஜ்ஜயினியில் சாதுர்மாஸ்ய விரதத்தை அனுஷ்டிப்பதில் ஈடுபட்டிருந்த,*



WWW.SRINGERI.NET

தக்ஷிணாம்நாய சிருங்கேரி சாரதாபீடத்தின் 35-வது அதிபதியும், சாஸ்த்திரங்கள் அனைத்திலும் கரைகண்டவருமான ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களைத் தஞ்சமடைந்து, அவர்களிடம் சாஸ்த்திரம் கற்பதிலுள்ள தனது இச்சையை வெளிப்படுத்தினான்.

ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தம்மை அண்டிவந்த இந்த பிரஹ்மசாரியின் சிரத்தை, வினயம், நல்லொழுக்கம் மற்றும் புத்திக்கூர்மை முதலான குணங்களைக் கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் சாஸ்த்திரம் கற்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனடியாகச் செய்தார். தாமே சாஸ்த்திரத்தில் சில நூல்களைக் கற்பித்தார். வேறு சிலவற்றைக் கற்பிப்பதற்கு, தர்க்க சாஸ்த்திரத்தில் மிகவும் தேர்ந்தவரும் பண்டிதர்களில் மூத்தவருமான கொல்லபூடி கோபாலகிருஷ்ண சாஸ்த்திரிகளை நியமித்தார். வெகுகுறுகிய காலத்திலேயே பிரஹ்மசாரி ஸீதாரமாஞ்சனேய சர்மா சாஸ்த்திரத்தில் சிறந்த புலமையைப் பெற்றான்.

பின்னர், ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள், இந்த பிரஹ்மசாரியின் தர்மசிரத்தை, பாண்டித்தியம் மற்றும் செயல்திறம் இவைகளை நன்றாகக் கவனித்தபின், பகவதீ ஸ்ரீசாரதாபரமேச்வரியின் உத்தரவைப் பெற்றுக்கொண்டு, அனைவருக்கும் ஆனந்தம் நல்கும் “ஆனந்த” என்றே பெயருள்ள வருடத்தில் (1974) ஆச்வயுஜ கிருஷ்ண துவாதசியன்று இந்த பிரஹ்மசாரிக்கு ஸந்நியாஸ ஆச்ரமத்தையும்,



WWW.SRINGERI.NET

*பிரணவ—மஹாவாக்ய உபதேசங்களையும் அனுக்கிரஹித்து, "பாரதீதீர்த்த" என்ற யோகப்பட்டத்தையும் அருளி ஸநாதன வைதிக தர்மத்திற்கும் தக்ஷிணாம்நாய சிருங்கேரி சாரதாபீடத்திற்கும் சுபத்தை நல்கியருளினார்கள்.*

*ஜகத்குரு ஸ்ரீஸ்ரீபாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் தக்ஷிணாம்நாய சிருங்கேரி சாரதாபீடத்தின் 36-வது அதிபதியாகப் பட்டமேற்று, வேத-சாஸ்த்திர-ஸம்பிரதாயங்களைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறார்கள். ஸநாதன வைதிக தர்ம பிரசாரத்தில் தம்மை சிறப்பாக ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்கள். தினந்தோறும் பகவதீ சாரதாம்பாளையும் பகவான் சந்திரமௌளீச்வரரையும் விசேஷமாகப் பூஜித்தருள்கிறார்கள், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை ஸஞ்சாரம் செய்து, ஞானவேட்கையுடன் வருபவர்களுக்கு தர்மத்தின் மற்றும் பிரஹ்மத்தின் தத்துவங்களை அவரவர்களின் தகுதிக்கேற்ப உபதேசித்தருள்கிறார்கள், மேலும் இதுவரை எவரும் செய்திடாத அநேகவிதமான அரிய பணிகளைச் செய்துகொண்டு, அனைத்துலகமும் போற்றத்தக்கவராகத் திகழ்ந்து வருகிறார். ஜகத்குரு ஸ்ரீஸ்ரீபாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்களின் சிறந்த அனுக்கிரஹத்தினால் மக்களனைவரும் அதிக சிரேயஸ்ஸை அடைவார்கள் என்பதில் சிறிதும் ஐய்யமில்லை.*

*மசீலிபட்டணம் நகரத்தில் எந்த புனிதமான இடத்தில் எங்கள் குருநாதர் அவர்களின் அவதாரமாயிற்றோ அங்கு சிருங்கேரி சங்கர மடத்தின் கிளை ஒன்றை நிறுவவேண்டும் என்ற எண்ணத்துடன் 2013 ஆம் ஆண்டு சிஷ்யர்களில் சிலர் நிர்மாண காரியத்தைத் தொடங்கினர். அதற்காகக் கட்டிடத் தொழிலாளர்கள் அங்கு நியமிக்கப்பட்டனர். அவர்கள் அஸ்திவாரத்திற்காக பூமியைத் தோண்டிக்கொண்டிருந்த சமயத்தில், அவர்களுள் ஒருவன் தன்னுடைய மண்வெட்டியை உயர்த்தி பூமியில் பதித்தான். அவனுடைய மண்வெட்டி பூமியில் பட்ட இடத்தில் ஒரு வித்தியாசமான ஒலி எழுந்தது. இந்த ஒலியைக் கேட்டவுடனே அங்கிருந்தவர்கள், அதற்கான காரணத்தைக் கண்டறிய வந்தனர். அப்பொழுது அங்கு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தக்கூடிய வகையில் பகவான் ஆஞ்ஜநேயரின் குழந்தை ரூபத்தில் அமையப்பெற்ற அழகான சிலைக் கிடைத்தது. எந்த இடத்தில் நற்குலப் பெண்மணியான அனந்தலக்ஷ்மீ அம்மாள் கனவில் பகவான் ஆஞ்ஜநேயரை தரிசித்தாளோ, எந்த இடத்தில் அவள் நற்குணங்கள் அனைத்தும் பொருந்திய தெய்வீகத்தன்மையுள்ள புத்திர ரத்தினத்தைப் பெற்றெடுத்தாளோ, அதே இடத்தில் குழந்தை வடிவத்தில் இருக்கும் பகவான் ஆஞ்ஜநேயரின் சிலை*

WWW.SRINGERI.NET

கிடைத்ததைப் பார்த்து அனைவரும் மெய்சிலிர்த்தனர்.

பின்னர் அங்கு பகவான் ஆஞ்ஜநேயருக்கு ஒரு சிறு கோவிலையும், சிருங்கேரி சங்கரமடத்தின் கிளை ஒன்றையும் நிர்மாணித்து, விளம்ப வருடத்தின் சைத்திர மாதத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் துவிதீயை ( ஏப்ரல் 2 2018 ) அன்று எங்களுடைய குருநாதரின் உத்தரவின் படி பிரதிஷ்டை மற்றும் கும்பாபிஷேகத்தை நாங்கள் நிகழ்த்தினோம். இப்பொழுது அங்கு வீற்றிருக்கும் பகவான் ஆஞ்ஜநேயர் அனைவருக்கும் அருளை வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார்.

ஆகையால் குருவின் முதலாவது லக்ஷணமாகச் சொல்லப்பட்ட "மாத்ருத: பித்ருத சுத்த: – நற்குலத்தில் பிறந்தவர்" என்பதை எங்களுடைய குருநாதரிடம் பிரத்தியக்ஷமாக காணமுடியும்.



WWW.SRINGERI.NET

# ஶுத்$_3$த$_4$பா$_4$வ:

குருவின் இரண்டாவது லக்ஷணமாக ஶுத்$_3$த$_4$பா$_4$வ: என்பது கூறப்பட்டுள்ளது. சுத்தபாவம் என்றால் சுத்தமான சுபாவம் உள்ளவர் என்று பொருள். அதாவது தூய்மையான மனதுள்ளவர் என்று அர்த்தம். எவர் மனதால், வாக்கால் மற்றும் சரீரத்தினால் எப்பொழுதும் பிறரின் நன்மையையே கருதுவாரோ, போதிப்பாரோ, ஆசரிப்பாரோ அவரே சுத்தபாவர், சுத்தமான சுபாவம் உள்ளவராவர். எவர் மனதால் பிறருக்கு துரோஹம் செய்ய எண்ணுவாரோ, பேச்சாலும் உடலாலும் பிறருக்கு நன்மையைச் செய்பவரைப் போல நடிப்பாரோ அவர் சுத்தபாவம் உள்ளவரல்லர், வஞ்சகர் எனப்படுவார்.

எங்கள் குருநாதர் மக்களனைவரின் நன்மைக்காக ஸ்ரீ சாரதாம்பாளையும், பகவான் ஸ்ரீ சந்திரமௌளீச்வரரையும் எப்பொழுதும் பூஜிக்கிறார்கள். எங்களுடைய ஸந்நியாஸத்திற்குப் பிறகு ஒருநாள், "இன்று பகவான் சந்திரமௌளீச்வரரின் பூஜையை நீங்கள் செய்யவேண்டும்" என்று குருநாதர் எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அப்பொழுது அவர்களிடம் நான், "பூஜா சமயத்தில் ஸங்கல்பம் என்ன செய்யவேண்டும்" என்று கூறியருளுமாறு கேட்டேன். அப்பொழுது குருநாதர், "ஸர்வேஷாம் ஜனானாம் யோக$_3$க்ஷேமார்த்த$_2$ம் (எல்லா ஜனங்களின் யோகக்ஷேமத்திற்காக) என்று ஸங்கல்பம் செய்யவேண்டும். அதைத் தவிர நம்மால் வேண்டப்படுவது வேறெதுவும் இல்லை. இதற்காகவே நாம் பிரதிதினமும் சந்திரமௌளீச்வரைப் பூஜிக்கின்றோம். மேலும் விஜய யாத்திரையின் சந்தர்பத்தில் எந்தெந்த க்ஷேத்திரங்களில் நாம் பகவானைப் பூஜிக்கின்றோமோ அங்கெல்லாம் மக்களனைவரின் யோகக்ஷேமத்திற்கான வேண்டுதலுடன் தான் பகவனைப் பூஜிக்கின்றோம். ஆகையால் இதே ஸங்கல்பத்தைத் தான் செய்யவேண்டும்" என்று குருநாதர் உத்தரவிட்டார்கள்.

WWW.SRINGERI.NET

மற்றொரு சமயம், குருநாதர் எங்களுக்கு இதேபோல் இன்னொரு உத்தரவிட்டார்கள், "மந்திர சாஸ்த்திரத்தில் பகவானின் ஒரு யந்திரத்தைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. அந்த யந்திரத்தை பூஜிப்பதால் பெரும் நன்மை ஏற்படும் என்று சாஸ்த்திரம் கூறுகிறது. ஆகையால் அந்த யந்திரத்தை செதுக்கி மடத்தில் பிரதிஷ்டித்து அதன் பூஜையைச் செய்ய வேண்டியுள்ளது. அதற்காக முதலில் சாஸ்த்திரத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் யந்திரத்தை நீங்கள் வரையவேண்டும்" என்று கட்டளையிட்டார்கள்.

இந்த யந்திரத்தில் பல தாமரை உருவங்கள் உள்ளன. அத்தாமரைகளுக்கு பல இதழ்கள் உள்ளன. அந்த இதழ்களில் மந்திரங்களை எழுதவேண்டும் என்று சாஸ்த்திரம் உபதேசிக்கிறது. மேலும் முதலாவது இதழில் அந்த மந்திரத்தின்



முதலாவது எழுத்து, இரண்டாவது இதழில் இரண்டாவது எழுத்து என்னும் முறையில் விதிமுறைகள் உபதேசிக்கப்பட்டுள்ளன. அதே அடிப்படையில் யந்திரம் வரையவேண்டும். அவ்வாறே முதலில் யந்திரத்தின் ஒரு பாகத்தை நாங்கள் வரைந்து, குருநாதரிடம் காண்பித்தோம். அதைப் பார்த்துவிட்டு, "இந்த யந்திரத்தில் உங்களால் மந்திரங்களின் அக்ஷரங்களெல்லாம் உள்முகமாக அதாவது யந்திரத்தின் உட்பகுதியை நோக்கி இருக்குமாறு எழுதப்பட்டுள்ளன. சாஸ்த்திரத்தில் யந்திரங்களில் எழுத்துக்கள் எழுதும் முறையைப் பற்றி இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. – உள்முகமாக எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ள யந்திரங்களைப் பூஜிப்பதனால், அதைப் பூஜைசெய்பவன் எந்தப் பகைவனை வீழ்த்த விரும்புகிறானோ அந்த எதிரிக்கு

WWW.SRINGERI.NET

தோல்வி ஏற்படும். மேலும் வெளிமுகமாக எழுதப்பட்ட எழுத்துக்களுள்ள யந்திரங்களைப் பூஜிப்பதால், பூஜைசெய்பவன் எவருக்கு பகவானின் அருள் கிடைக்கவேண்டுமென்று விரும்புகிறானோ அவருக்கு அனுக்கிரஹம் கிடைக்கும் என்று உபதேசிக்கப்பட்டுள்ளது. இந்த வரைபடத்தில் உங்களால் உள்முகமாக எழுத்துக்கள் வரையப்பட்டுள்ளன. இதனால் பிறருக்கு வீழ்ச்சி ஏற்படும். ஆனால் நமக்கு வீழ்த்தப்படவேண்டிய நிக்கிரஹிக்கப்படவேண்டிய பகைவர்கள் எவருமில்லை, மாறாக அனைவரும் அனுக்கிரஹிக்கப்பட வேண்டியவர்களே. ஆகையால் மக்களனைவரின் அனுக்கிரஹத்திற்காக இந்த யந்திரத்திற்கு பூஜை செய்யவேண்டும் என்ற கருத்துடனே தான் யந்திரத்தை வரையவேண்டும் என்று குறிப்பிட்டோம். அதனால் இந்த யந்திரம் வரையும் போது வெளிமுகமாகவே எழுத்துக்கள் எழுதப்படவேண்டும். அதனால் தான் நாம் விரும்பியதான மக்களனைவருக்கான அனுக்கிரஹம், இதைப் பூஜிப்பதால் கிடைக்கும்.'' என்று குருநாதர் கூறினார்கள். பிற்பாடு எங்களால் அதே ரீதியில் வெளிமுகமாக எழுத்துக்கள் எழுதப்பட்டன. அந்த முறையிலேயே செதுக்கப்பட யந்திரம், மடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜிக்கப்பட்டு வருகிறது. ஆகையால் குருவின் லக்ஷணமாக கூறப்பட்ட 'சுத்தபாவத்வம்' – எப்பொழுதும் பிறருக்கு நன்மையைச் செய்யும் தன்மை' இதை குருநாதரிடம் நம்மால் தெளிவாகக் கண்டுணர இயலும்.

WWW.SRINGERI.NET

# ஜிதேந்த்$_3$ரிய:

குருவின் மூன்றாவது லக்ஷணம் ஜிதேந்த்$^3$ரிய: என்பதாகும். எவரால் இந்திரியங்கள் வெல்லப்பட்டனவோ அவர் ஜிதேந்திரியர் என்படுவார். இந்திரியங்களை அடக்கவில்லை என்றால் நம்மால் எந்த ஒரு செயலையும் சாதிக்கமுடியாது. பிரஹ்மவிசாரத்தைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். பிரஹ்மவிசாரம் செய்யாமல் ஞானத்தை அடைய இயலாது. ஞானம் அடையாமல் மோக்ஷத்தைப் பெற இயலாது. ஆகையால் மோக்ஷம் அடைவதற்கு ஞானம் மிகத்தேவை. ஞானம் அடைவதற்கு பிரஹ்ம விசாரம் செய்யவேண்டும். பிரஹ்மவிசாரத்தில் யோக்யதையானது ஸாதனசதுஷ்டயம் உடையவர்களுக்கே. அந்த ஸாதனசதுஷ்டயங்களில் மூன்றாவதாக உபதேசிக்கப்பட்டதான சமாதிஷட்கம் என்பதில் இந்திரிய நிக்கிரஹம் அதாவது புலனடக்கம் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலால் இந்திரிய நிக்கிரஹமுள்ளவருக்குத் தான் பிரஹ்மவிசாரம் எளிதாக அமையும். புலனடக்கமே இல்லாதவனுக்கு பிரஹ்மத்தைக் கற்றுணரவும் முடியாது, பிறருக்கு அதைக் கற்பிக்கவும் முடியாது. அப்படிப்பட்டவர்களால் ஸம்ஸார சாகரத்தைக் கடக்கவும் முடியாது, பிறரைக் கடக்கவைக்கவும் முடியாது. ஆகவேதான் குருவின் லக்ஷணங்களில் இந்திரியங்களை வெல்லும் தன்மையும் கூறப்பட்டுள்ளது.

கடோபநிஷத்தில்

***ஆத்மானம் ரதி$_2$னம் வித்$_3$தி$_4$ ஶரீரம் ரத$_2$மேவ து |***
***பு$_3$த்$_3$தி$_4$ம் து ஸாரதி$_2$ம் வித்$_3$தி$_4$ மன: ப்ரக்$_3$ரஹமேவ ச ||***

WWW.SRINGERI.NET

ஜிதேந்த்$_3$ரிய:

***இந்த்$_3$ரியாணி ஹயானாஹு: விஷயாம்ஸ்தேஷு கோ$_3$சரான் |***
***ஆத்மேந்த்$_3$ரியமனோயுக்தம் போ$_4$க்தேத்யாஹுர்மனீஷிண: ||***

***யஸ்த்வவிஜ்ஞானவான் ப$_4$வத்ய-***
***யுக்தேன மனஸா ஸதா$_3$ |***
***தஸ்யேந்த்$_3$ரியாண்யவஶ்யானி***
***து$_3$ஷ்டாஶ்வா இவ ஸாரதே$_2$: ||***



***யஸ்து விஜ்ஞானவான்ப$_4$வதி யுக்தேன மனஸா ஸதா$_3$ |***
***தஸ்யேந்த்$_3$ரியாணி வஶ்யானி ஸத$_3$ஶ்வா இவ ஸாரதே$_2$: || முதலியன.***

…………

மேலும் இறுதியில்

***விஜ்ஞானஸாரதி$_2$ர்யஸ்து மன:ப்ரக்$_3$ரஹவான்னர: |***
***ஸோ(அ)த்$_4$வன: பாரமாப்னோதி தத்$_3$விஷ்ணோ: பரமம் பத$_3$ம் ||***

என்று சொல்லப்பட்டுள்ளது.

இந்த வாக்கியங்களின் கருத்து — இவ்வுலகில் ரதத்தில் பயணிக்கும் ஒருவன்

WWW.SRINGERI.NET

தான் செல்ல விரும்பும் இடத்தை அடைவதற்காக ரதத்தில் ஏறி அமர்ந்தவுடன், அந்த ரதத்தின் திறமையான சாரதியானவன் குதிரைகளைக் கயிற்றால் இறுகப் பிணைத்து அவற்றைக் கட்டுப்பாட்டுடன் செலுத்துவதால் பயணி தான் செல்லவிரும்பிய இடத்தைச் சென்றடைகிறான். அந்த சாரதியானவன் குதிரைகளைக் கட்டுப்படுத்தி செலுத்துவதில் திறமையுள்ளவன் என்றால், பயணியால் தான் விரும்பிய இடத்தைச் சென்றடைய முடிகிறது. ஒருவேளை சாரதி திறமையற்றவனென்றால், குதிரைகளைக் கட்டுப்படுத்த இயலாமல், குதிரைகள் எந்த இடத்தைச் சென்றடைகின்றவோ தனக்குத் தேவையற்றதான அவ்விடத்திற்குப் பயணி செல்லவேண்டியதாகிறது. இவ்வாறு ரதம் மற்றும் பயணி என்ற உருவகத்தால் ஒரு சிறப்பான பொருள் வேதத்தால் போதிக்கப்படுகிறது. இங்கு ஜீவன் என்பவன் பயணிக்கு ஒப்பானவன். நமது உடல் என்பது ரதத்திற்கு ஒப்பானது. புத்தியானது சாரதிக்கு ஒப்பானது. மனமானது குதிரையைப் பிணைக்கும் கயிற்றுக்கு ஒப்பானது. இந்திரியங்கள் குதிரைக்கு ஒப்பானவை. வேதத்தால் விளக்கப்படும் ஆழமான கருத்தென்னவென்றால் ஜீவனானவன் இந்த சரீரத்தில் ஏறி, சாஸ்த்திரம், ஆசார்யரின் உபதேசம் முதலானவற்றால் புத்தியைப் பக்குவப்படுத்தி, பக்குவப்பட்ட புத்தியால் மனத்தை அடக்கி, அடங்கிய மனத்தால் இந்திரியங்களை சீர்திருத்தி, பிரஹ்மவிசாரம் செய்து, தனக்கு இஷ்டமான விஷ்ணுவின் இடத்தை அதாவது ஸர்வவ்யாபியான பரமாத்ம ஸ்வரூபத்தை



WWW.SRINGERI.NET

அடையட்டும், பரமாத்மனிலிருந்து வேறுபடாத நிலையை, அபேதத்தை அடைந்து முக்தனாகட்டும்.” என்பதாகும். ஜீவனானவன் அடங்கிய இந்திரியமுள்ளவனாக இருந்தால் அப்போது அவனுக்கு இஷ்டமான மோக்ஷமென்ற இடத்தை அடைய முடியும். ஒருவேளை அவன் அடங்காத இந்திரியமுள்ளவனாக இருந்தால் அப்போது அவன் ஜன்ம-மரணங்களின் சுழற்சியானஸம்ஸாரத்தில்உழல்கிறான்.ஆகையால்அடங்காதஇந்திரியங்கள் முதலானவை பந்தத்திற்கு காரணமாகின்றன. அடங்கியவையாக இருந்தால் அவைகளே மோக்ஷத்திற்குக் காரணமாகின்றன. இந்த விஷயங்களே மேற்கூறிய கடோபநிஷத்தில் விளக்கப்படுகின்றன.

அதனால் தான் மனத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது முன்னோர்கள்,

**மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் ப$_3$ந்த$_4$மோக்ஷயோ: |**
**ப$_3$ந்தா$_4$ய விஷயாஸக்தம் முக்த்யை நிர்விஷயம் ஸ்ம்ருதம் ||**

என்று கூறினர்

விஷயங்களில் பற்றுக்கொண்ட மனதுதான் ஜீவர்களின் ஸம்ஸாரத்திற்குக் காரணமாகிறது. அதே மனது அடக்கப்பட்டு பரமாத்மனிடத்தில் நிறுத்தப்பட்டால் மோக்ஷத்திற்குக் காரணமாகிறது. ஆகையால் குருவானவர் இந்திதியங்களை வென்றவராக இருத்தல் மிகவும் அவசியமானது. எவர் புலன்களை வென்றவரோ அவர் தானும் ஸம்ஸாரத்தைக் கடப்பதோடல்லாமல், பிறரையும் கடக்க வைக்கும் சக்தி படைத்தவராகவுள்ளார். தமது சிரமத்தை சிறிதும் பொருட்படுத்தாமல் தர்மத்தின் ஏற்றத்தில் எப்பொழுதும் ஈடுபட்டுள்ள எங்கள் குருநாதரிடம் இந்திரியங்களை வென்றுள்ள தன்மையை நம்மால் கண்டுணர முடியும்.

WWW.SRINGERI.NET

# ஸர்வாகமானாம் ஸாரஜ்ஞ:

அடுத்த லக்ஷணம் "ஸர்வாகமானாம் ஸாரஜ்ஞ:" என்று கூறப்பட்டுள்ளது. புராண- இதிஹாஸ- தர்மசாஸ்த்திரங்களின் ஸாரத்தை – தாத்பர்யத்தை எவர் நன்றாக அறிந்துள்ளாரோ அவர் ஸர்வாகமானாம் ஸாரஜ்ஞர் என்று அழைக்கப்படுகிறார். நம்முடைய தர்மத்தை போதிக்கும் அனைத்து நூல்களின் ஸாரத்தை அறிந்துணர்ந்தவர். எங்களுடைய குருநாதருக்கு புராண இதிஹாஸ தர்மசாஸ்த்திரங்களில் அசாதாரணமான பாண்டித்தியம் உள்ளது. அந்த நூல்களில் உள்ள சில விஷயங்கள் மேல்நோட்டமாக பார்க்கும்போது ஒன்றுக்கொன்று முரண்படுவதைப் போல காணப்படும். அவ்விஷயங்கள் மிகவும் ஆழமான கருத்துள்ளவைகளாதலால் சிறுமதியினருக்குப் புரிந்துகொள்ள இயலாதவை. அப்பேர்ப்பட்ட பல விஷயங்களை குருநாதர் தெளிவுறப் போதிக்கிறார்.

பகவத்கீதையில் மூன்றாவது அத்தியாயத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர்,

**தே$_3$வான் பா$_4$வயதானேன தே தே$_3$வா பா$_4$வயந்து வ: |**
**பரஸ்பரம் பா$_4$வயந்த: ஶ்ரேய: பரமவாப்ஸ்யத$_2$ ||**

இவ்வாறு சொல்கிறார்.

ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கராசார்யர் பாஷ்யத்தில் இந்த சுலோகத்திற்கு அர்த்தம் கூறும்போது. "மக்களே! நீங்கள் யாகம் முதலியவற்றால் இந்திரன் முதலான தேவர்களை சந்தோஷப்படுத்துங்கள். யாகங்கள் முதலியவற்றால் மகிழ்ந்த இந்திரன் முதலான தேவர்கள் மழை, உணவு முதலான நீங்கள் விரும்பியவற்றை எல்லாம் கொடுத்து உங்களைக் காப்பாற்றுவர். இவ்வாறு பரஸ்பரம் சந்தோஷப்படுத்திக்கொண்டு சுவர்கம் முதலான நன்மைகளைப் பெற்று கிரமமாக மோக்ஷத்தை அடையுங்கள்" என்று கூறுகிறார்.

WWW.SRINGERI.NET

*ஆனால் பாகவதபுராணத்தில் ஓரிடத்தில் எப்போது நந்தகோபன் இந்திரனை பூஜிக்க விரும்பினானோ அப்போது பகவான் ஸ்ரீகிருஷ்ணர், "நமக்கு மற்றும் நம்முடைய பசுக்களுக்கு தேவையானவற்றை அனைத்தையும் இந்த கோவர்தன மலை தானே அளிக்கிறது. ஆகையால் இதையே பூஜிப்போம். எதற்காக இந்திரனுக்குப் பூஜை செய்யவேண்டும்?" என்று நந்தகோபனை இந்திர பூஜை செய்யவிடவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது. பகவான் நந்தகோபனை இந்திரபூஜை செய்யவிடாமல் தடுத்துவிட்டு, பின்னர் தானே கீதையில் தே$_3$வான் பா$_4$வயத, தே தே$_3$வா பா$_4$வயந்து வ: (தேவர்களை மகிழவுறச்செய்யுங்கள், அவர்கள் நம்மை மகிழ்விப்பார்கள்) என்று கூறியுள்ளார். இதைப் படிக்கும்போது "இங்கு ஏதோ ஒரு முரண்பாடு தெரிவதுபோல இருக்கிறது. அது சரிதானா?" என்று கேட்டால், எங்கள் குருநாதர் இவ்வாறு கூறியருள்கிறார், "யாகங்களால் தேவர்களை மகிழ்வியுங்கள் என்று பகவானால் கீதையில் எதுஉபதேசிக்கப்பட்டதோ, அதற்கு முரண்பாடு எதுவுமில்லை. பின்னர் பகவான் நந்தகோபனை இந்திர பூஜை செய்யவிடாமல் பகவான் ஏன் தடுத்தார் என்றால், இந்திரனுக்கு மக்களைக் காக்கும் விஷயத்தில் இருந்த ஒரு அஹங்காரத்தைப் போக்கடிக்கும் விருப்பத்துடன் பகவான் இவ்வாறு செய்தார். இந்திரன் 'நான் தான் எல்லா உலகத்தையும் காப்பாற்றுகிறேன்" என்று நினைத்துக்கொண்டு பகவானையே மறந்துவிட்டான். எப்பொழுது நந்தகோபன்அவனுக்குப் பூஜை செய்யவில்லையோ, அப்பொழுது கோபமடைந்த இந்திரன் கல்மழையைப் பொழிந்தான். உடனே பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தமது சுண்டுவிரல் நுனியில் கோவர்தன மலையை நிறுத்தி ஏழுநாட்கள் கோபர்களையும் பசுக்களையும் காப்பாற்றினார். அதன்பின் இந்திரன் தன்னுடைய தவறை உணர்ந்து மிகவும் வெட்கித்து பகவானின் பாதாரவிந்ததை சரணடைந்து மன்னிப்புக் கோரினான். பிறகு பகவான் அவனுக்கு அனுக்கிரஹம் செய்தார். எந்த பரமாத்மாவினருளால் இந்திரன் உலகத்தைக் காக்கும் பணியைச் செய்துவருகின்றானோ, அந்த பரமாத்மாவையே மறந்து தன்னையே அனைத்துலகையும் காப்பவனாக எப்போது நினைத்தானோ, அப்போது பகவான் இந்திரனின் அஹங்காரத்தை அகற்ற விரும்பியவராக, அவனுக்குப் பூஜை செய்யவிடாமல் நந்தகோபனை தடுத்தார். அதனால் இவ்விஷயங்களில் எந்த முரண்பாடும் இருப்பதாகக் கருதமுடியாது. நாம் அனைவரும் தேவதைகளை பூஜிக்கத்தான் வேண்டும். தேவதைகள் நம்முடைய யாகங்களால் சந்தோஷப்படுத்தப்பட வேண்டியவர்களே. இவ்வாறு "முரண்படுவது போல தோன்றினாலும் இவ்விஷயங்களில் எந்த ஒரு முரண்பாடும் இல்லை" என்று குருநாதர் விளக்கியருளினார்.*



எங்கள் குருநாதர் அவர்கள் சமயம் கிடைக்கும் போதெல்லாம் ஒரு க்ஷணம் கூட வீண்செய்யாமல் நூல்களைப் படித்துக் கொண்டிருப்பார்கள். மேலும் அந்நூல்களில் இருக்கும் அபூர்வமான மற்றும் சுவாரஸ்யமான விஷயங்களை சிஷ்யர்களுக்கு உபதேசிப்பார்கள். ஒருசமயம் ஸ்ரீமத்பாகவத புராணத்திலிருந்து,

**ந ஹ்யம்மயானி தீர்த்தா$_2$னி ந தே$_3$வா ம்ருச்சி$_2$லாமயா: ।**
**தே புனந்த்யுருகாலேன த$_3$ர்ஶநாதே$_3$வ ஸாத$_4$வ: ॥**

என்ற ஸாதுக்களின் உயர்வைப் போதிக்கும் ஒரு சுலோகத்தை உபதேசித்தார்கள். இந்த சுலோகத்தின் ஸாமான்யமன அர்த்தம் – "உலகில் தீர்த்தம் என்ற சொல் ஒரு புனிதமான நீர்நிலையைக் குறிக்கும். களிமண் அல்லது கல்லாலான சிலைகள் தெய்வங்களாக (சிவன், விஷ்ணு, பகவதி முதலான தெய்வ ஸ்வரூபங்களாக) எல்லோராலும் பூஜிக்கப்படுகின்றன. ஆனால் வாஸ்தவத்தில் 'தீர்த்தா$_2$னி அம்மயானி ந' – நீர்நிலைகள் தீர்த்தங்கள் அல்ல, 'தே$_3$வா ம்ருச்சி$_2$லாமயா: ந' – மண் அல்லது கல்லாலான சிலைகள் தெய்வங்கள் அல்ல. ஏன் ? 'உருகாலேன' – வெகுகாலத்திற்குப் பிறகு இவை தம்மைப் பூஜிப்பவர்களைப் புனிதமாக்குகிறது. 'ஸாத$_4$வ:' – பரோபகாரம் செய்வதில் எப்போதும் ஈடுபட்டவர்களான ஸாதுக்களோ எனில், 'த$_3$ர்ஶநாதே$_3$வ' – தமது தரிசனத்தை மக்கள் அடைந்த உடனேயே அவர்களைப் பாவனம் செய்கிறார்கள்." என்பதாக எண்ணத் தோன்றும். ஆனால் உலகில் நீர்நிலைகள்தான் தீர்த்தங்களாகப் பிரபலமடைந்துள்ளன. கற்சிலைகள்

WWW.SRINGERI.NET



WWW.SRINGERI.NET

தெய்வத்தின் உருவங்களாகப் பிரபலமடைந்துள்ளன. இவ்வாறிருக்கும்போது 'வாஸ்தவத்தில் நீர்நிலைகள் தீர்த்தங்கள் அல்ல, கற்சிலைகள் தெய்வங்களல்ல' என்ற கூற்று உலக வழக்கிற்கு முரண்படுகிறதே என்றும் எண்ணத் தோன்றுகிறது. 'இந்த முரண்பாடு உண்மையகவே உள்ளதா?' மேலும் 'இச்சுலோகத்தின் பொருளை எவ்வாறு புரிந்து கொள்வது?' என்று கேட்டால், அதற்கு விடை – "ந ஹ்யம்மயானி தீர்த்தா$_2$னி ந தே$_3$வா ம்ருச்சி$_2$லாமயா:" என்பதில் இரண்டு முறை " 'ந' என்ற சொல் (இல்லை என்ற எதிர்மறைப் பொருள் கொடுக்கும் சொல்)" உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் இச்சுலோகத்தைப் பொருள் கொள்ளவேண்டிய முறை "அம்மயானி தீர்த்தா$_2$னி ந புனந்தி இதி ந" நீர்நிலைகளாலான தீர்த்தங்கள் புனிதமாக்காது என்பதில்லை. "ம்ருச்சி$_2$லாமயா: தே$_3$வா: ந புனந்தி இதி ந" கற்சிலைகளாலான தெய்வங்கள் பவித்திரமாக்கமாட்டார்கள் என்பதில்லை. மக்களை புனிதமாக்கியே தீருவார்கள், ஆனால் "உருகாலேன" - வெகுகாலம் அவர்களை உபாஸிப்பதால் புனிதமாக்குவார்கள். "ஸாத$_4$வ: த$_3$ர்ஶநாதே$_3$வ புனந்தி" – ஸாதுக்கள் தமது தரிசனத்தை மக்கள் அடைந்த உடனேயே அவர்களைப் பாவனம் செய்கிறார்கள். இவ்விஷயம் ஸ்ரீமத்பாகவதத்தின் உரையான ஸ்ரீதரீவ்யாக்யானத்தில் கூறப்பட்டுள்ளது. அதை குருநாதர் எங்களுக்கு உபதேசித்தார். இவ்வாறு ஆகமங்களனைத்திலும் சிறந்த பாண்டித்தியத்தைப் பெற்றுத்திகழும் எங்கள் குருநாதரிடம் "ஸர்வாகமானாம் ஸாரஜ்ஞ:" என்ற ஸத்குருவின் அடைமொழியை நாம் கண்டுணர முடியும்.

# ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வவித்

அடுத்ததாக "ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வ வித்" என்ற லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் "எல்லா சாஸ்த்திரங்களின் அர்த்தத்தை உள்ளது உள்ளவாறே அறிந்தவர்". குருநாதர் அவர்களுக்கு நியாய, வியாகரண, வேதாந்த மற்றும் மீமாம்ஸா சாஸ்திரங்களில் உள்ள பாண்டித்தியத்தை ஓரிரு வாக்கியங்களில் சுருக்கமாக நம்மால் கூற இயலாது.

## கல்வி பயின்ற முறை

குருநாதர் அவர்களின் கல்வி பயின்ற முறையே நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. அவர்கள் பிரஹ்மசாரியாக சாஸ்த்திரம் படித்துக்கொண்டிருந்த போது அவர்களுடைய ஆசிரியராக நியாய சாஸ்த்திரத்தில் சிறந்த அறிஞரான கொல்லபூடி கோபாலகிருஷ்ண சாஸ்த்திரிகள் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் காலையில் நியாய சாஸ்த்திரத்தில் வாதநூல்கள் என்று கூறப்படும் உயர்ந்த நூல்களைக் கற்பித்துக்கொண்டிருந்தார். சாஸ்த்திரிகள் காலையில் எந்த விஷயங்களைப் பாடம் செய்தாரோ, அவற்றை மத்தியானத்தில் சாஸ்த்திரிகளின் எதிரில் சிந்தனை செய்யும் சமயத்தில் எங்கள் குருநாதர் திருப்பிச் சொல்லக்கூடிய வழக்கத்தைக் கொண்டிருந்தார். காலையில் சாஸ்த்திரிகள் பாடத்திலுள்ள ஒவ்வொரு வரியின் அபிப்பிராயத்தை எவ்வாறு விவரித்தாரோ, அதை குருநாதர் மத்தியானத்தில் சிந்தனை வேளையில் எந்த ஒரு மாற்றமும் இல்லாமல் அவ்வாறே விவரித்தார். மேலும் ஒரு விஷயத்தை ஒரே ஒருமுறை கேட்டவுடனேயே மனதில் வாங்கிக்கொண்டு அதை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருந்தார்.

இந்த சந்தர்பத்தில் ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாசார்யாள் கல்வி பயின்ற முறையைப் பற்றி ஸ்ரீமத் வித்யாரண்ய மஹாஸ்வாமிகள் ஸ்ரீசங்கரவிஜயத்தில் கூறியதை ஞாபகப்படுத்திக் கொள்கிறோம் –

WWW.SRINGERI.NET

**அஜனி து$_3$:க$_2$கரோ ந கு$_3$ரோரஸௌ**

**ஶ்ரவணத: ஸக்ருதே$_3$வ பரிக்$_3$ரஹீ ।**


**ஸஹனிபாட$_2$ஜனஸ்ய கு$_3$ரு: ஸ்வயம்**

**ஸ ச பபாட$_2$ ததோ கு$_3$ருணா வினா ॥**

“அஜனி து$_3$:க$_2$கரோ ந கு$_3$ரோரஸௌ – ஸ்ரீசங்கரர் தமது குரு பாடம் செய்யும் பொழுதோ அல்லது வேறு சமயங்களிலோ குருவிற்கு எவ்வித வருத்தத்தையும் அளித்ததில்லை. ஶ்ரவணத: ஸக்ருதே$_3$வ பரிக்$_3$ரஹீ – ஒரு தடவை குருவினால் எது போதிக்கப்படுகிறதோ அதை உடனே புரிந்து கொண்டு விடுவார். அவ்விஷயத்தை ஒருப்போதும் மறக்கவும் மாட்டார். ஒரு சிஷ்யன் இம்மாதிரி படிப்பானானால் குருவிற்கு அவன் விஷயத்தில் வருத்தமென்பதே இருக்காது. குருவானவர் அப்படிப்பட்ட சிஷ்யனுக்கு மிகுந்த ஆர்வத்துடன் கல்வி கற்பிப்பார். ஸஹனிபாட$_2$ஜனஸ்ய கு$_3$ரு: ஸ்வயம் – கல்வி பயிலும் காலத்திலேயே ஸ்ரீசங்கரர் குருவிற்கு சமமான ஸாமர்த்தியத்தைப் பெற்றிருந்தார். ஆகையால் தான் தம்முடன் பயிலும் வித்யார்த்திகளுக்கு தாமே பாடங்களைச் சொல்லிக்கொடுத்தார். அந்த வித்யார்த்திகள் தமக்குவரும் சந்தேஹங்களுக்குரிய விடையை ஸ்ரீசங்கரரிடமிருந்தே கிடைக்கப் பெற்றனர். ஸ ச பபாட$_2$ ததோ கு$_3$ருணா வினா – இதன் அர்த்தமென்னவென்றால், குருவானவர் ஒரு சில நூல்களைத் தான் போதித்திருந்தார். மீதமிருந்த நூல்களை சங்கரர் தானே கற்றறிந்தார்.” ஸ்ரீசங்கரரின் கல்வி பயிலும் முறை இவ்வாறிருந்தது.

எங்கள் குருநாதர் கல்விகற்ற முறையும் இவ்வாறே அமைந்திருந்தது. அவர்களும் தமது ஆசிரியருக்கு எவ்வித வருத்தமும் ஏற்படுத்தவில்லை. ஒரே ஒருமுறை கேட்டவற்றையும் கூட எப்போதும் மறக்க மாட்டார்கள். மேலும் சிருங்கேரியிலுள்ள பாடசாலையில் படித்துவந்த பற்பல வித்யார்த்திகள் தமது சந்தேஹத்திற்குரிய விடைகளை குருநாதரிடமிருந்தே கிடைக்கப்பெற்றனர். இவருடைய ஆசிரியர் இவருக்கு ஒருசில நூல்களைத் தான் கற்பித்தார். மீதமுள்ள தர்க்க சாஸ்த்திரத்தில் பாடபுத்தகத்தில் இல்லாத மற்றும் தலைசிறந்த அறிஞர்களால் எழுதப்பட்ட உயர்ந்த விஷயங்களான க்ரோடபத்ரம் முதலியவற்றைத் தாமாகவே கற்றறிந்தார்.

WWW.SRINGERI.NET



**ஸ்ரீமஹாகணபதி வாக்யார்த்த வித்வத் ஸபை**

*சிருங்கேரியில் சுமார் 130 வருடங்களுக்கு மேலாக வருடந்தோறும் விநாயக சதுர்த்தி சமயத்தில் ஸ்ரீமஹாகணபதி வாக்யார்த்த வித்வத் ஸபை நடத்தப்பட்டுவருகிறது. இந்த சபையில் சாஸ்த்திரங்களில் மிகவும் நிபுணர்களாக இருக்கும் வித்வான்களால் மட்டுமே பங்குபெற முடியும். இச்சபையின் தனிச்சிறப்பு என்னவென்றால் இதில் முதலாவதாக ஜகத்குரு மஹாஸ்வாமிகள் அவர்களே நியாய சாஸ்த்திரத்தில் வாக்யார்த்தம் வழங்கி ஆரம்பித்து வைப்பார்கள். பிறகு வித்வான்கள் தமது வாக்யார்த்தங்களை அளிப்பார்கள். ஆகையால் பாரதநாட்டில் நடத்தப்பெறும் வாக்யார்த்த சபைகளுக்கு மத்தியில் ஸ்ரீமஹாகணபதி வாக்யார்த்த வித்வத்சபையானது தலைசிறந்ததாக விளங்குகிறது.*

*இந்த மஹாகணபதி வாக்யார்த்த வித்வத் ஸபையில் எங்கள் குருநாதர்*

பிரஹ்மசாரியாக இருந்தபோது நியாய சாஸ்த்திரத்தில் “சதுர்தச லக்ஷணீ” என்ற நூலிள்ள இரண்டு ‘ப்ரக$_3$ல்ப$_4$’ லக்ஷணங்களில் இரண்டாவது லக்ஷணத்தில் வாக்யார்த்தம் செய்தார். அதில் அவர்கள் விவரித்த விஷயங்கள் மிகவும் புதியனவாகவும் ஆழமான கருத்துக்களுள்ளதாகவும் இருந்தன. அவர் பேசியதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள், பின்னர் குருநாதரிடம் – ‘உன்னால் விவரிக்கப்பட்ட விஷயங்கள் எந்த நூலிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டவை? யாரால் பாடம் செய்யப்பட்டவை?’ என்று வினவினார். அதற்கு குருநாதர் “இந்த விஷயமானது இரண்டாவது ப்ரக$_3$ல்ப$_4$ லக்ஷணத்தை விவரித்து எழுதப்பட்ட ‘நசரத்னமாலிகா’ என்ற க்ரோடபத்திரத்தில் இருக்கிறது. இதை நானேதான் கற்றுக்கொண்டு சபையில் விவரித்தேன், எவரும் எனக்குக் கற்பிக்கவில்லை.’ என்று பதிலளித்தார். ஆழமான விசாரத்தையும் தாமாகவே படித்துக்கொண்டு சபையில் சிறப்பக விளக்கியதைக் கண்டு மிகவும் மகிழ்ந்த ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் குருநாதருக்கு ஆசீர்வாதங்களை வழங்கியருளினார். இவ்வாறு எல்லா விதங்களிலும் குருநாதர் கல்விகற்ற பாணியானது ஸ்ரீஆதிசங்கர பகவத்பாதாசார்யாளின் பாணியை நமக்கு நினைவூட்டுவதாக அமைந்தது.

## பண்டிதர்களும் வியக்கும் பாண்டித்தியம்

ஒருமுறை வாக்யார்த்தசபையில் குருநாதர் நியாயசாஸ்த்திரத்தில் ‘ஸாமன்யநிருக்தி’ என்ற நூலில் ‘விஶிஷ்டத்$_3$வயாக$_4$டிதத்வம்’ என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு வாக்யார்த்தம் செய்தார். அப்போது அங்கு அனேக சாஸ்த்திரங்களில் நிபுணர்களான வித்வான்கள் அமர்ந்திருந்தனர். அவர்களில் ஆந்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த நியாயசாஸ்த்திர அறிஞர், மத்துலபல்லி மாணிக்ய சாஸ்த்திரிகளும் இருந்தார். “ஸ்ரீ கதாதரபட்டாசார்யர் தமது நூலில் “ஹேத்வாபாஸத்துடைய’ (போலிக்காரணத்தின்) ஸாமான்யலக்ஷணத்தில் ‘அனதிரிக்தவ்ருத்தித்வரூப அவச்சேதகத்வம்’ என்பதை அறிமுகப்படுத்தினோமானால் ‘மஹாவிசிஷ்டம்’ என்ற ஸ்தலத்தில் ‘அதிவ்யாப்தி’ என்ற தோஷம் (பிழை) ஏற்படும் என்று நிரூபித்து, அந்தப் பிழை நீங்குவதற்காக ‘விசிஷ்டத்வய அகடிதத்துவம்” என்பதை அறிமுகப்படுத்தினார்.” என்று குருநாதர் விவிரித்துக் கொண்டிருந்தார்.

அப்போது மாணிக்ய சாஸ்த்திரிகள், “ ‘மஹாவிசிஷ்டத்தில்’ அதிவ்யாப்தி என்ற பிழையைப் போக்குவதற்காக ‘அனதிரிக்தவ்ருத்தித்வரூப

WWW.SRINGERI.NET

அவச்சேதகத்வத்தை” லக்ஷணத்தில் அறிமுகப்படுத்தியதைப் போல் ‘ஸ்வரூப ஸம்பந்தரூப அவச்சேதகத்வம்” என்பதை அறிமுகப்பட்டுத்தலாமே. இதனாலேயே ‘மஹாவிசிஷ்டத்தில்” ஏற்பட்ட பிழையைப் போக்கமுடியுமே. இவ்வாறிருக்க எதற்காக ‘விசிஷ்டத்வய அகடிதத்துவம்’ என்பதை அறிமுகப்படுத்த வேண்டும் ?” என்று கேள்வி கேட்டார்.

உடனேயே குருநாதர் அக்கேள்விக்கு, “‘அனதிரிக்தவ்ருத்தித்வரூப அவச்சேதகத்வத்தை’ லக்ஷணத்தில் அறிமுகப்படுத்தியதைப் போல் ‘ஸ்வரூபஸம்பந்தரூப அவச்சேதகத்வத்தை’ அறிமுகப்பட்டுத்தினால் வேறோரிடத்தில் அதாவது ‘வ்யாபக ஸாமானாதிகரண்யகடித ஸத்ப்ரதிபக்ஷம்’ என்ற ஸ்தலத்தில் ‘அவ்யாப்தி’ என்ற வேறொரு பிழை ஏற்பட்டுவிடும், ஆகையால் ‘விசிஷ்டத்வய அகடிதத்துவத்தை’ அறிமுகப்படுத்துவதே உசிதம்’ என்று விடையளித்தார்.

பின்னர் குருநாதர் தமது வாக்யார்த்தத்தைத் தொடர்ந்து வழங்கி முடித்தார். இதன் பின் மாணிக்ய சாஸ்த்திரிகள் குருநாதரின் அருகில் வந்து ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, “நான் பற்பல வாக்யார்த்த சபைகளில் பாகம் வஹித்து வருகிறேன். எங்கெல்லாம் பண்டிதர்கள் ‘விசிஷ்டத்வய அகடிதத்துவ’ விசாரத்தை விவரிப்பார்களோ அவர்களிடமெல்லாம் நான் இந்தக் கேள்வியைக் கேட்பேன். உடனே அப்பண்டிதர்களெல்லாம் ‘இந்தக் கேள்விக்கு என்ன விடை என்பதை யோசிக்க வேண்டும்’ என்றோ, ‘இக்கேள்விக்கான விடை எனக்குத் தெரியாது’ என்றோ சொல்லுவார்கள். எவராலும் இதற்குப் பதில் சொல்ல இயலவில்லை. ஆனால் இன்று இச்சபையில் நான் ஆசார்யாள் அவர்களிடம் இக்கேள்வியைக் கேட்டவுடனே ஆசார்யாள் அதற்கான விடையை கூறிவிட்டார்கள். இப்பேர்ப்பட்ட பாண்டித்தியத்தை ஆசார்யாளிடம் மட்டும் தான் பார்க்க முடியும். வேறெங்கும் காணமுடியாது.” என்று மிகுந்த மகிழ்ச்சியுடனும் பக்தியுடனும் கூறி மீண்டும் நமஸ்கரித்தார். இந்நிகழ்வு நியாயம் முதலான அனைத்து சாஸ்த்திரங்களில் குருநாதருக்கு இருந்த பாண்டித்தியத்தை நமக்கு உணர்த்துவதாக அமைந்தது.

## இடைவிடாமல் சாஸ்த்திர பாடம்

நம் குருநாதரிடமுள்ள தனிப்பட்ட சிறப்பென்னவென்றால் தாமே அனைத்து சாஸ்த்திரங்களிலும் கரைகண்டவராக திகழ்வதோடு, சாஸ்த்திர போஷக ஸபை முதலியவற்றின் மூலம் சாஸ்த்திரங்களைப் பிரசாரம்

WWW.SRINGERI.NET



செய்துகொண்டும், சாஸ்த்திர பண்டிதர்களுக்கு சன்மானங்களைச் செய்து அவர்களை ஊக்குவித்துக்கொண்டும், தகுதிவாய்ந்த வித்யார்த்திகளுக்கு தாமே சாஸ்த்திரங்களைக் கற்பித்துக்கொண்டும் விளங்கிவருதல் ஆகும். மடத்தில் எவ்வளவு பணிகளும் விசேஷ நிகழ்ச்சிகளும் இருந்தாலும் அவர்கள் ஒருபோதும் சாஸ்த்திர பாடம் பண்ணாமல் இருக்க மாட்டார்கள். 'கர' வருடத்தின் சித்திரை மாதத்தில் எங்களுக்கு நியாய சாஸ்த்திரத்தை பாடம் பண்ண ஆரம்பித்தார்கள். முதலில் தர்க்கஸங்கிரஹம் என்ற நூலைக் கற்பித்தார்கள். அன்றிலிருந்து 11 மாதங்களில் தர்க்கஸங்கிரஹம், நீலகண்ட வியாக்யானத்துடன் தீபிகா, நியாய ஸித்தாந்த முக்தாவளீ மற்றும் தினகரீ ஆகிய நூல்களைக் கற்பித்தார்கள். அதன் பின் குருநாதர் தக்ஷிணபாரதத்தில் விஜய யாத்திரையை மேற்கொண்டார்கள். அவர்கள் சிருங்கேரியிலிருந்து புறப்பட்டு பதிமூன்று மாதங்கள் கர்னாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரபிரதேசம் (இன்றைய ஆந்திர மற்றும் தெலங்கானா) மாநிலங்களில் விஜய யாத்திரையை நிகழ்த்தியருளினார்கள். இவ்வளவு மாதங்கள் அவர்கள் யாத்திரை செய்தாலும் பாடம் செய்வதை ஒருபோதும் விட்டுவிடவில்லை. இந்த பதிமூன்று மாத விஜய யாத்திரையில் நியாய சாஸ்த்திரத்தில் ஸ்ரீகதாதர பட்டாசார்யர் எழுதிய பஞ்சலக்ஷணீ, சதுர்தசலக்ஷணீ, ஸித்தாந்தலக்ஷணம், பக்ஷதா ஆகிய நூல்களையும் அவயவ நூலிலுள்ள ப்ரதிஜ்ஞா லக்ஷணம் வரையிலான பகுதிகளையும் கற்பித்தார்கள்.

தர்மப்பிரசாரத்திற்கான நிகழ்ச்சிகளும் பணிகளும் எத்தனையோ இருந்தாலும் கூட, அனத்யயன தினங்களைத் தவிர (சம்பிரதாயத்தின் படி

கல்விகற்பிக்கக் கூடாத தினங்களைத் தவிர) பிற தினங்கள் அனைத்திலும் நியமமாக அவர்களால் பாடம் கற்பிக்கப்பட்டது. பாடசாலைகளில் நியாயசாஸ்த்திரத்திற்காக நியமிக்கப்படும் ஆசிரியர்கள் கூட இந்தக் குறுகிய காலவரையறைக்குள் இத்தனை நூல்களைப் பாடம் பண்ண சாத்தியமே இல்லை. அதன் பின் சிருங்கேரிக்கு வந்த பிற்பாடு மீதமிருந்த வாதக்கிரந்தங்களை அதாவது அவயவ நூலில் ஹேதுலக்ஷணத்திலிருந்து



தொடங்கி இறுதிவரைக்கும் உள்ள பகுதிகள், ஸாமன்யநிருக்தி – ஸவ்யபிசார – ஸத்ப்ரதிபக்ஷ – சக்திவாத – வ்யுத்பத்திவாத மற்றும் ப்ராமாண்யவாத நூல்களைக் கற்பித்தார். ஜகத்குரு ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதாசார்யர் பாரத தேசம் முழுவதும் மும்முறை ஸஞ்சாரம் செய்துகொண்டே சிஷ்யர்களுக்கு எவ்வாறு பாஷ்யங்களைக் கற்பித்துக்கொண்டிருந்தாரோ, யாத்திரை சமயத்திலும் கூட பாஷ்யபாடங்களை ஒருபோதும் விட்டுவிடவில்லையோ, அவ்வாறே எங்கள் குருநாதர் சிஷ்யர்களான எங்களுக்கு நியாய–வேதாந்தம் முதலான சாஸ்த்திரங்களைக் கற்பித்தார்.

## சாஸ்த்திர ஸம்ரக்ஷகர்

தாமே சாஸ்த்திரத்தில் கரைகண்டவராகவும், தினமும் சிஷ்யர்களுக்குப் பாடம் பண்ணுபவராகவும், பண்டிதர்களையும் வித்யார்த்திகளையும் ஊக்குவிப்பவராகவும் திகழ்பவர் தான் வாஸ்தவமான சாஸ்த்திர ஸம்ரக்ஷகர்

WWW.SRI-GURU.NET

என்று அழைக்கப்படுவார். இப்பேர்ப்பட்ட வாஸ்தவமான சாஸ்திர ஸம்ரக்ஷகர், நம் குருநாதர் தக்ஷிணாம்நாய சிருங்கேரி சாரதாபீடாதீச்வர ஜகத்குரு சங்கராசர்ய ஸ்ரீஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள் ஆவார்கள்.

## பரீக்ஷை செய்யும் முறை

குருநாதர் அவர்கள் எங்களுக்கு சாஸ்த்திர நூல்களை பாடம் செய்து கொண்டிருந்த சமயத்தில், ஒரு நூலைக் கற்பித்து முடித்தவுடன் நான் குருநாதரிடம், "இந்த நூலிலுள்ள விஷயங்களில் பரீக்ஷை எப்போது நடக்கும்?" என்று கேட்டேன். அதற்கு குருநாதர், "எங்களுடைய கற்பிக்கும் முறையில் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் தான் தேர்வு நடக்கும், அதற்காக நீ நன்றாகப் படித்து அதில் தேர்ச்சி பெறவேண்டும் என்பதில்லை, நாம் எப்போது வேண்டுமானாலும் பரீக்ஷை செய்வோம். எப்போதெல்லாம் நாம் கேள்விகளைக் கேட்கிறோமோ, அப்போதெல்லாம் அவற்றிற்குரிய விடைகளை கூறுவதற்கு நீ தயாராக இருக்கவேண்டும்." என்று கூறினார்.

## கல்வியைக் கற்கும் முறை

மற்றொரு சமயம் குருநாதர், சாஸ்த்திரக் கல்வியை எவ்வாறு கற்கவேண்டுமென்று போதித்தார். ஜகத்குரு ஸ்ரீ வித்யாரண்ய மஹாஸ்வாமிகள் அவர்கள் தாம் இயற்றிய பஞ்சதசீ என்ற நூலில் ஒரு முமுக்ஷு வானவன் பிரஹ்மவிசாரத்தை எவ்வாறு செய்யவேண்டும் என்ற கேள்விக்கு விடையாக

*தச்சிந்தனம் தத்கத$_2$னமன்யோன்யம் தத்ப்ரபோ$_3$த$_4$னம் |*
*ஏததே$_3$கபரத்வம் ச ப்$_3$ரஹ்மாப்$_4$யாஸம் விது$_3$ர்பு$_3$தா$_4$: ||*

என்ற ஒரு சுலோகத்தைக் கூறியுள்ளார். இங்கு "தத்" என்ற சொல்லால் பிரஹ்மம் குறிப்பிடப்படுகிறது. முமுக்ஷு வால் எப்போதும் "தச்சிந்தனம்" – பிரஹ்ம விஷயத்தைப் பற்றியே சிந்தனை செய்யப்பட வேண்டும். அதைத் தவிர ஏனைய அநித்திய வஸதுக்களின் சிந்தனையை ஒருபோதும் செய்யக்கூடாது, ஏனென்றால் அநித்தியவஸ்துக்களின் சிந்தனையால் எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை. எப்போதும் "தத்கத$_2$னம்" – பிரஹ்மத்தைப் பற்றிய அறிவை அடைய உதவும் சொற்களை மட்டும் கூறவேண்டும்.



WWW.SRINGERI.NET

அதேபோல் “அன்யோன்யம் தத்ப்ரபோ3த4னம்” – ஞானவேட்கையுள்ள பிறருடன் பிரஹ்மத்தைப் பற்றிய விசாரத்தை மட்டும் தான் செய்யவேண்டும். எவ்வாறென்றால் பிரஹ்மத்தைப் பற்றிய விஷயத்தில் எந்த ஒரு பாகத்தை இவன் தெரிந்து கொண்டுள்ளானோ, அதை இன்னொருவனுக்கு கூறவேண்டும். தனக்குத் தெரியாத விஷயங்களை இன்னொருவன் அறிந்து கொண்டுள்ளான் என்றால் அவனிடமிருந்து அவ்விஷயங்கள் கேட்கப்பட வேண்டும். இந்த முறையில் ஒருவருக்கொருவர் பிரஹ்மத்தைப் பற்றி கருத்துப் பரிமாற்றங்களின் மூலம் அதைப்பற்றிய விசாரம் செய்யப் படவேண்டும். “ஏததே3கபரத்வம்” – பிரஹ்மவிசாரம் ஒன்றில் மட்டும் ஈடுபட்டிருத்தலை, “ப்3ரஹ்மாப்4யாஸம்” – பிரஹ்மத்தைப் பற்றிய விசாரமாக, “விது3ர்பு3தா4:”– பண்டிதர்கள் அறிந்து ள்ளார்கள். இவ்வாறு கூறியபின் குருநாதர், “இம்மாதிரி பயிற்சியை முமுக்ஷுக்கள் மட்டும் பண்ணவேண்டும் என்பதில்லை தர்க்க சாஸ்திரம் எனப்படும் நியாய சாஸ்த்திரம் படிப்பவர்களும் கூட இதேபோல் தான் பயிற்சி செய்யவேண்டும். ஆகையால் தான்

**தச்சிந்தனம் தத்கத2னமன்யோன்யம் தத்ப்ரபோ3த4னம் |**
**ஏததே3கபரத்வம் ச தர்காப்4யாஸம் விது3ர்பு3தா4: ||**



WWW.SRINGERI.NET

என்று சிறிது மாற்றியும் இந்த சுலோகத்தைச் சொல்லலாம். ஆகையால் நியாய சாஸ்த்திரக் கல்வியை இவ்வாறே மிகுந்த கவனத்துடன் நீ படிக்கவேண்டும்.” என்று கூறினார்.

சாஸ்த்திரங்களிலுள்ள பற்பல விஷயங்கள் எங்கள் குருநாதரின் முககமலத்திலிருந்து எப்போதும் “நான் நான்” என்று போட்டி போட்டுக்கொண்டு என்று வெளிவருகிறது. பற்பல சாஸ்த்திரங்களில் நுண்ணிய அறிவுள்ள பண்டிதர்கள் கூட குருநாதரின் முகாரவிந்தங்களிலிருந்து பற்பல புதுப்புது விஷயங்களை தெரிந்துகொண்டு “எங்களால் பல வருடங்களாக இந்த சாஸ்த்திரத்தில் சிறந்த பயிற்சி செய்யப்பட்டது. ஆனால் இன்றுவரை இந்த விஷயம் எங்களுக்கு தெரிந்திருக்கவில்லை. ஆசார்யாள் சொன்ன உடன் தான் இதைத் தெரிந்துகொண்டுள்ளோம். இது எங்களுக்கு ஒரு புது விஷயமாகத் தென்படுகிறது” என்று கூறுகிறார்கள். இம்மாதிரியான அஸாதாரணமான பாண்டித்தியத்தை குருநாதரிடம் தான் காண முடியும்.

## சாஸ்த்திர போஷக ஸபை

குருநாதர் சாஸ்த்திர பிரசாரத்திற்காகவும், சாஸ்த்திரம் படிப்பவர்களை ஊக்குவிப்பதற்காகவும் சாஸ்த்திர போஷக ஸபா என்ற ஒரு சபையை நிறுவினார்கள். இதில் பல வித்தியார்த்திகள் நியாய, வேதாந்த, மீமாம்ஸா, வியாகரண சாஸ்த்திரங்களையும் வேதபாஷ்யங்களையும் நன்றாகப் படித்து பரீக்ஷை அளித்துவந்தார்கள். இவர்கள் படிப்பை முடிக்கும் சமயத்தில் குருநாதர் அவர்கள் மஹாபரீக்ஷையை தாமே நடத்தினார்கள். இதில் வெற்றி பெற்றவர்களுக்கு “வித்வத் ப்ரவர” என்ற பட்டத்தை அளித்து அனுக்கிரஹித்தார்கள். இந்தப் பண்டிதர்கள் எல்லாம் இன்று பாரதத்தின் பல்வேறு பகுதிகளில் தங்களுடைய பாண்டித்தியத்தினால் நல்ல பிரசித்தியடைந்துள்ளனர். அவர்கள் “நாங்கள் சாஸ்த்திர போஷக ஸபையின் மூலம் சாஸ்த்திரத்தை. மிகுந்த உத்ஸாஹத்துடனும் கவனத்துடனும் படித்தோம். சாஸ்த்திரம் படித்து முடிக்கும் போது எங்களை ஸாக்ஷாத் ஜகத்குரு அவர்களே பரீக்ஷை செய்தார்கள். இது எங்களுக்கு ஒரு சிறந்த பாக்கியமாகும். எங்களுக்கு “வித்வத் ப்ரவர” என்ற பட்டத்தை அளித்து அனுக்கிரஹம் செய்தார்கள். ஜகத்குரு அவர்களால் பரீக்ஷை செய்யப்பட்ட நாங்கள் தன்யர்களானோம்.” என்று கூறுகிறார்கள். இவ்வாறு பண்டிதர்கள் சாஸ்த்திர போஷகஸபையின் மூலம் படிப்பதையும் ஜகத்குருவின் தலைமையில் நடக்கும் மஹாகணபதி வாக்யார்த்த ஸபையில் பங்கு கொள்வதையும் தமது



WWW.SRINGERI.NET

வாழ்வின் மிகுந்த பாக்கியமாகக் கருதுகின்றார்கள்.

## எவரும் வெளிச்சத்திற்க்கு தராத ஒரு விளக்கம்

குருநாதர் சாஸ்த்திரங்களில் மிகவும் ஆழ்ந்த அகன்ற நுண்ணிய ஞானத்தைப் பெற்றவர். பிரஹ்ம சூத்திரங்களில் 5—ஆவது சூத்திரம் "ஈக்ஷதேர்நாஶப்₃த₃ம்" என்பது. ஸாங்க்கிய சாஸ்த்திரக்காரர்களால் ஜகத்திற்குக் காரணமாகக் கூறப்படும் முக்குணங்களின் ஸ்வரூபமான சுதந்திரமான பிரதானம் (மூலப்பிரகிருதி) இந்த சூத்திரத்தினால் நிராகரிக்கப்படுகிறது. இச்சூத்திரத்திற்கு பகவத்பாதாளின் பாஷ்யம் — பிரதானம் அசப்தம்



(வேதங்களில் கூறப்படவில்லை) — "ஸதே₃வ ஸோம்யேத₃மக்₃ர அஸீத்", "ததை₃க்ஷத", "தத்தேஜோ(அ)ஸ்ருஜத" முதலான வேதவாக்கியங்களில் "ஸத்" என்ற சொல்லால் எந்த ஒரு ஜகத்காரணம் விளக்கப்படுகிறதோ அது பிரதானம் இல்லை. எதனால் என்றால் ஈக்ஷணத்தினால் (ஈக்ஷதே:) என்பதாகும். "பிரதானம் அசப்தம் ஈக்ஷணத்தினால்" என்று கூறியபின் வேதத்தில் சொல்லப்படவில்லையாதலால் பிரதானம் ஜகத்திற்கு காரணம் ஆகாது என்று கூறப்படுகிறது. ஆனால் இங்கு மேல்நோட்டமாகப் பார்த்தோமானால் ஒரு முரண்பாடு இருப்பதாகத் தோன்றுகிறது. "பிரதானம் அசப்தம் ஈக்ஷணத்தினால்" என்று கூறினால் இந்த அனுமானத்தில் ஹேதுவான ஈக்ஷணம்

பக்ஷமான பிரதானத்தில் இல்லை என்றாகிறது, ஏனென்றால் பிரதானம் என்பது அசேதனமானது, ஈக்ஷணம் (மனத்தில் சித்தரித்துப் பார்ப்பது) என்பது சைதன்யமுள்ள இடத்தில் தான் இருக்கமுடியும். ஆகையால் இம்மாதிரியான அனுமானம் சரியல்ல என்று தோன்றுகிறது.



இவ்விடத்தில் குருநாதர் இந்த அனுமானப் பிரயோகத்தை எவ்வாறு பொருள் கொள்ளவேண்டுமென்று கூறினார். "பிரதானம் அசப்தம் ஈக்ஷணாபாவாத்" என்று கொள்ளவேண்டும் என்று கூறினார். சூத்திரத்தில் "ஈக்ஷதேர்—ந—அஶப்$_3$த$_3$ம்" என்பதில் எந்த ஒரு "ந" என்ற சொல்லுண்டோ அதனுடைய பொருளான "இல்லை என்ற எதிர்மறைப் பொருளை", "ஈக்ஷதே: (ஈக்ஷணத்தினால்)" என்னும் சொல்லில் "ஈக்ஷணம்" என்ற மூலசொல்லின் பொருளுக்கும் வேற்றுமை உருபின் பொருளான ஹேதுவிற்கும் நடுவில் சேர்த்துப் பொருள் கொள்ளவேண்டும். அப்போது "ஈக்ஷணம் இல்லையாதலால்" என்று ஹேதுவின் பொருளை சொல்லமுடியும். இந்த "ஈக்ஷணம் இல்லாதது" என்ற பொருளுடைய ஹேது அசேதனமான பிரதானத்தில் இருப்பதற்கு எவ்விதத் தடையுமில்லை. இவ்வாறுதான் பாஷ்யத்தைப் பொருள் கொள்ளவேண்டும்.

ஒரு சொல்லிற்கும் அதன் உருபுக்கும் நடுவில் எவ்வாறு எதிர்மறைப் பொருளைக் கொடுக்கும் "ந" என்ற சொல்லை சேர்த்துப் பொருள் கொள்ளமுடியும்? என்று சந்தேஹப்பட வேண்டிய அவசியமில்லை. நம் முன்னோர்கள் அவ்வாறு பொருள் செய்து காண்பித்துள்ளார்கள்.

WWW.SRINGERI.NET

வ்யுத்பத்திவாதமென்ற நூலில் ஸ்ரீ கதாதரபட்டாசார்யர் அவர்கள் மூலசொல்லின் பொருளிற்கும் அதன் உருபின் பொருளிற்கும் நடுவில் எதிர்மறைப் பொருள் கொடுக்கும் "ந" என்ற சொல்லின் பொருளைத் தவிர வேறெதையும் சேர்த்துப் பொருள் கொள்ளமுடியாது என்று கூறியுள்ளார். எவ்வாறெனில் "நாமூட₄ஸ்யேதரோத்பத்தே:", "நானுபம்ருத்₃ய ப்ராது₃ர்பா₄வாத்" முதலானசூத்திரங்களில்மேல்கூறப்பட்ட விதத்தில்பொருள் கொள்ளுதல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. "நாமூட₄ஸ்யேதரோத்பத்தே:" — என்ற சூத்திரத்தில் அமூட₄ஸ்ய — மோஹமற்றவருக்கு, இதரயோ: — விருப்பு மற்றும் வெறுப்புகளுக்கு நடுவில். மோஹமற்றவருக்கு விருப்பு மற்றும் வெறுப்புகள் தோன்றுவதில்லையாதலால் விருப்பு, வெறுப்பு மற்றும் மோஹங்களுக்கு நடுவில் மோஹம் தான் மிகுந்த பாபமளிக்கக் கூடியது என்ற பொருள் கூறப்படவேண்டும். இந்தப் பொருள் சூத்திரத்தில் "ந" என்ற எதிர்மறைப் பொருள் கொடுக்கும் சொல்லானது தனியாகக் கூறப்பட்டிருந்தாலும் இதன் பொருளானது "உத்பத்தே: (உத்பத்தியினால்)" என்ற சொல்லில், சொல்லிற்கும் உருபிற்கும் நடுவில் இதன் பொருளை அமைத்து "உத்பத்தியில்லையாதலால்" என்று பொருள் கொள்ளப்படுவதினால் தான் கிடைக்கிறது.

இதேபோல் "நானுபம்ருத்₃ய ப்ராது₃ர்- பா₄வாத்" என்ற இடத்தில் விதையை உடைக்காமால் அங்குரத்தின் உத்பத்தி இருக்காது என்ற பொருள் கூறப்படுகிறது. இவ்விடத்திலும் "ந" என்ற எதிர்மறைப் பொருள் கொடுக்கும் சொல்லின் பொருளை பிராதுர்பாவ சொல்லின் பொருளுக்கும் அதன் வேற்றுமை உருபின் பொருளுக்கும் நடுவில் அமைத்து பொருள் கொள்ளப்பட்டுள்ளது. ஆகையால் இப்படிப்பட்ட பொருள் கூறும் முறையானது முன்னோர்களால்ஏற்றுக்கொள்ளப்பட்டதேஆகும். இதைத்தான் கதாதரபட்டாசார்யரும் வ்யுத்பத்திவாதமென்ற நூலில் விளக்கியிருக்கிறார். ஆகையால் நாம் எடுத்துக்கொண்ட அனுமானப் பிரயோகத்தில் பக்ஷத்தில் ஹேதுவின் இருப்பை சம்பாதிப்பதற்காக "ந" என்ற எதிர்மறை சொல்லின் பொருளை ஈக்ஷணம் என்ற சொல்லின் மற்றும் அதன் உருபின் நடுவில் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆகையால் "ப்ரதா₄னமஶப்₃த₃ம் ஈக்ஷணாபா₄வாத்" என்றே அனுமானப் பிரயோகம் சொல்லவேண்டும் என்று குருநாதர் உபதேசித்தார். இவ்விஷயம் பாஷ்யத்திற்கு அநேக பண்டிதர்கள் செய்துள்ள எந்த உரையிலும் சொல்லப்படவில்லை. இம்மாதிரியான ஆழ்ந்த சாஸ்த்திர விசாரங்களை பாடம் செய்யும்போது குருநாதர் உபதேசித்துவந்தார்.

## நுண்ணிய முரண்பாட்டிற்கு குருநாதர் அளித்த தீர்ப்பு

*நியாய சாஸ்த்திரத்தில் நியாய ஸித்தாந்த முக்தாவளி என்ற நூலின் உரை நூலான தினகரியில் ஹேத்வாபாஸத்தைப் பற்றி (போலி ஹேது/காரணம்) விவரிக்கும் சமயத்தில் "யத்3 விஷயகத்வேன ஜ்ஞானஸ்யானுமிதிவிரோதி4த்வம் தத்த்வம்" என்ற ஹேத்வாபாஸத்தின் ஸாமானான்ய லக்ஷணத்தில் மூன்றாம் வேற்றுமை உருபின் அர்த்தமாக வரையறுக்கப்பட்ட "அவச்சே2த3கத்வம்" எப்படிப்பட்டது "ஸ்வரூபஸம்ப3ந்த4ரூபம்" என்று கூறலாமா? அல்லது "அனதிரிக்தவ்ருத்தித்வரூபம்" என்று கூறவேண்டுமா என்று பிரித்து விசாரிக்கும் போது "ஸ்வரூபஸம்ப3ந்த4ரூப அவச்சே2த3கத்வம்" என்று எடுத்துக்கொண்டால் தோஷத்தின் ஒரு பகுதியில் அதிவ்யாப்தி என்ற குறை உண்டாகும். அதைச் சரிசெய்வதற்காக "பர்யாப்தி" என்பதை லக்ஷணத்தில் சேர்த்தோமானால் அஸம்பவ: என்ற பிழை ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது. அனதிரிக்தவ்ருத்தித்வரூபாவச்சே2த3கத்வத்தை லக்ஷணத்தில் இருப்பதாகக் கொண்டால் ஹ்ரதோ3 வஹ்னிமான்" முதலான ஸ்தலங்களில் வஹ்ன்யபா4வ- விஶிஷ்டஹ்ரதம் மற்றும் கேவலஹ்ரத3ம் இவை இரண்டும் "விஶிஷ்டம் ஶுத்3தா4ன்னாதிரிச்யதே" என்ற நியமத்தின் படி ஒன்றே என்பதால் "வஹ்ன்யபா4வவிஶிஷ்டஹ்ரத3விஷயிதா" என்பது "ஹ்ரத3:" என்ற ஆகாரத்தைக் கொண்ட "விஶேஷ்யமாத்ரவிஷயதா" உள்ள "ப்ரதிப3ந்த4கநிஶ்சய"த்திலும் இருப்பதால், அங்கோ ப்ரக்ருதானுமிதி ப்ரதிப3ந்த4கதா இருப்பதில்லையாதலால் ப்ரக்ருதானுமிதி ப்ரதிப3ந்த4கதாதிரிக்த வ்ருத்தியாக வஹ்ன்யபா4வவிஶிஷ்ட- ஹ்ரத3-விஷயிதை ஆகிவிடுகிறது. வஹ்ன்யபா4வவிஶிஷ்டஹ்ரதம் முதலானவற்றில் அவ்யாப்தி என்ற தோஷம் கூறப்பட்டுள்ளது.*

*தினகரி நூலின் உரை நூலான ராமருத்3ரீயத்தில் எல்லா ஸ்தலங்களிலும் விஶிஷ்டதோ3ஷ விஷயிதையானது விஶேஷ்யமாத்ரவிஷயகநிஶ்சயத்தில் அப்ரதிப3ந்த4கத்தில் இருப்பதால், விஶிஷ்டதோ3ஷவிஷயிதை ப்ரதிப3ந்த4கதா அதிரிக்தவ்ருத்திதான் எப்போதும் ஆகிறது என்பதால் எங்கும் லக்ஷணத்தின் ஸமன்வயம் ஏற்படாது ஆகையால் அஸம்பவ: என்ற குறையே ஏற்படுகிறது என்று கூறுவதன் மூலம் தினகரி நூலிலுள்ள அவ்யாப்தி என்ற குறையைமாற்றி அஸம்பவ: என்ற குறைதான் இங்கு ஏற்படுகிறது என்று விளக்கியுள்ளார்.*

*இவற்றில் எது சரி? என்று குருநாதர் இதைப் பற்றி விளக்கும்போது "அனதிரிக்த-வ்ருத்தித்வரூபாவச்சே2த3கத்வத்தை லக்ஷணத்தில் சேர்ப்பதனால் தினகரி*

WWW.SRINGERI.NET

நூலில் கூறப்பட்டுள்ள அவ்யாப்தி என்ற குறைதான் ஏற்படும், அஸம்பவ: என்ற குறை ஏற்படாது. ஏனென்றால் ‘க$_4$டோ(அ)வ்ருத்தி’ என்ற ஸ்தலத்தில் எங்கெங்கு க$_4$டவத்$_3$விஷயிதை இருக்கிறதோ அங்கு எல்லா இடங்களிலும் ப்ரக்ருதானுமிதித்வவ்யாபக ப்ரதிப$_3$த்$_4$யதாநிரூபித ப்ரதிப$_3$ந்த$_4$கதை இருப்பதே இல்லை என்பதால் க$_4$டவத்$_3$ரூப பா$_3$த$_4$விஷயிதையை ப்ரதிப$_3$ந்த$_4$கதானதிரிக்தவ்ருத்தியாக எடுத்துக்கொள்ளமுடியும் என்று அங்கு க$_4$டவத்$_3$ரூபபா$_3$த$_4$த்தில் லக்ஷணத்தின் ஸமன்வயம் ஏற்படும். ராமருத்$_3$ரீ உரையில் அவ்யாப்தி என்ற தோஷத்தை அஸம்பவ: என்ற தோஷமாக மாற்றி உரை எழுதியதை உகந்ததாக கருத இயலாது. ராமருத்$_3$ரப$_4$ட்டாசார்யர் எல்லா சாஸ்த்திரங்களிலும் கரைகண்டவராக ஆழமான விசாரங்களை தமது உரையில் விளக்குகிறார். அதைப் படிப்பவர்களுக்கு சிறந்த ஞானம் ஏற்படுகிறது. ஆயினும் இந்த இடத்தில் ‘க$_4$டோ(அ)வ்ருத்தி’ என்ற ஸ்தலத்தில் லக்ஷண ஸமன்வயம் ஏற்படும் என்பதைக் கவனிக்காமல் இவ்வாறு அவ்யாப்தி தோஷத்தை அஸம்பவ: என்று மாற்றி எழுதிவிட்டார் என்று தான் நாம் கொள்ளவேண்டும்” என்று கூறினார். இவ்வாறு சாஸ்த்திரங்களில் தலைசிறந்த வெவ்வேறு உரை ஆசிரியர்கள் ஏதாவது ஒரு விஷயத்தில் முரண்படும் போது, குருநாதர் அதன் சரியான பொருளை எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார். இப்பேர்ப்பட்ட தலைசிறந்த பண்டிதர் நம் குருநாதர் தக்ஷிணாம்நாய சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடாதீச்வர ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள்.

குருநாதர் எவ்வாறு சாஸ்த்திரங்களில் ஈடுஇணையற்ற பாண்டித்தியத்துடன் திகழ்கிறார்களோ அதேபோல் ஸம்ஸ்கிருதம் முதலான அனைத்து மொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் உள்ளவர்களாக விளங்குகிறார்கள். அவர்கள் மிக அழகானதும் பொருட்செறிவுள்ளதுமான அனேக ஸ்தோத்திரங்களையும் கீர்த்தனைகளையும் ஸம்ஸ்கிருத மொழியில் இயற்றியுள்ளார்கள். அவர்களது ஸம்ஸ்கிருத அனுக்கிரஹ பாஷணமானது வித்வான்களும் வியக்கும் வண்ணம் சிறந்த இலக்கணச் செறிவுள்ள அனேக வாக்கியங்களை உள்ளடக்கியதாக விளங்குகிறது. இதைக் கேட்கும் ஸம்ஸ்கிருத மொழிப் பிரியர்கள் அளவற்ற ஆனந்தத்தை அடைகின்றனர். ஒவ்வொரு சந்தர்பத்திற்கும் ஏற்ப பற்பல சுவாரஸ்யமான சுலோகங்களை குருநாதர் உதாஹரிப்பார். இவை நம்மால் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டியவையாக இருக்கும்.

ஒரு முறை ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் யாத்திரை செய்தபோது பகவான்

WWW.SRINGERI.NET

ஸ்ரீரங்கநாதரைப் பற்றிய ஒரு சுலோகத்தை உதாஹரித்தார்.

***ஸ்ரீரங்கே$_3$ ஶோப$_4$தே யஸ்ய ஸ்ரீரங்கே$_3$ ஶோப$_4$தே ச ய: |***
***நமோஹம் கலயே தஸ்மை ந மோஹம் கலயே தத: ||***

யஸ்ய – எந்த பகவானின், (ஸ்ரீரங்கே$_3$ – ஸ்ரீ: + அங்கே$_3$), அங்கே$_3$ – சரீரத்தில், அதாவது வக்ஷஸ்தலத்தில், ஸ்ரீ: – லக்ஷ்மீதேவி, ஶோப$_4$தே – சோபிக்கிறாள், ய: ச – எந்த பகவான், ஸ்ரீரங்கே$_3$ – ஸ்ரீரங்கம் என்ற பெயரையுடைய க்ஷேத்திரத்தில் ஶோப$_4$தே – சோபிக்கிறான், தஸ்மை – அந்த ஸ்ரீரங்கநாதனான பகவானுக்கு, (நமோஹம் – நம: + அஹம்) அஹம் – நான், நம: – நமஸ்காரங்களை, கலயே – ஸமர்ப்பிக்கிறேன், இவ்வாறு, தத: – நமஸ்காரம் செய்த காரணத்தினால், மோஹம் – ஸம்ஸாரத்திற்குக் காரணமான அஞ்ஞானத்தை, ந கலயே – அடையமாட்டேன். பகவானின் அனுக்கிரஹத்தினால் ஸம்ஸாரத்திலிருந்து முக்தனாகிவிடுவேன் என்று பொருள். இவ்வாறான பற்பல விஷயங்களை அந்தந்த சந்தர்பங்களில் உபதேசிப்பார்கள். எவ்வளவோ புண்ணியம் பண்ணினவர்களுக்குத் தான் அந்த உபதேச அமிருதத்தை பருகும் பாக்கியம் கிடைக்கிறது. இவ்வாறு எல்லா சாஸ்த்திரங்களின் தத்துவத்தை அறிந்தவரான குருநாதரிடத்தில் சாஸ்த்திரங்களில் மற்றும் மொழி இலக்கணங்களில் ஆழ்ந்த, அகன்ற மற்றும் நுண்ணிய பாண்டித்தியத்தை நாம்

WWW.SRINGERI.NET

# பரோபகார நிரத:

ஸத்குருவின் அடுத்த லக்ஷணமாக பரோபகாரநிரத: என்பது சொல்லப்பட்டுள்ளது. எப்போதும் பிறருக்கு உதவி செய்வதில் ஈடுபட்டுள்ளவர் என்பது இதன் பொருள். சாஸ்த்திரத்தில் எது தர்மம்? எது அதர்மம் என்ற விஷயத்தில் “பரோபகார: புண்யாய பாபாய பரபீட$_3$னம்” என்று கூறப்பட்டுள்ளது. அதாவது பிறருக்கு உபகாரம் செய்தால் புண்ணியம் கிடைக்கிறது, ஆகையால் இது தான் தர்மம். பிறரை துன்புறுத்தினால் பாபம் ஏற்படுகிறது, அதனால் அது தான் அதர்மம் என்பது இந்த சாஸ்த்திர வாக்கியத்தின் பொருள். இந்த உதவியானது பலவகைப்படுகிறது எவருக்கு எந்த வேளையில் எது மிகுந்த தேவையுள்ளதோ, அவருக்கு அவ்வேளையில் அதை அளிப்பது தான் உதவி எனப்படுகிறது. அவை பசியுடன் இருப்பவனுக்கு அன்னதானம், ஏழைக்கு நிதி உதவி, மாணவனுக்கு கல்வியளித்தல் முதலானவை. இந்த வகையான உபகாரங்கள் அனைத்தும் தர்மமே. மேலும் எந்த செயல்களால் பிறருக்குத் துன்பம் ஏற்படுகிறதோ அவைகளைச் செய்வதே அபகாரம் எனப்படுகிறது. இது தான் அதர்மம். குருநாதர் எப்போதும் பிறருக்கு உதவி செய்வதிலேயே ஈடுபட்டுள்ளார். குருநாதர் பரோபகாரம் செய்கிறார்கள் என்று கூறுவதில் குறை இருப்பதாக நாம் நினைக்கிறோம். ஏனெனில் குருநாதர் பிறருக்கு உபகாரம் செய்கிறார்



WWW.SRINGERI.NET

என்று கூறுவதைக் காட்டிலும் பிறருக்கு அனுக்கிரஹம் செய்கிறார் என்று கூறுவதே மிகவும் பொருத்தமானது. அனுக்கிரஹத்திலேயே உபகாரமும் அடங்கியிருக்கிறது.

பிரதிதினம் நம் நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் மக்கள் அதிக எண்ணிக்கையில் ஜகத்குரு மஹாஸ்வாமிகள் அவர்களின் தரிசனத்திற்காக வருகிறார்கள். அவர்களை கீதையில் பகவான் கூறியபடி நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

***சதுர்விதா$_4$ ப$_4$ஜந்தே மாம் ஜனா: ஸுக்ருதினோ(அ)ர்ஜுன |***
***ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்தா$_2$ர்தீ$_2$ ஜ்ஞானீ ச ப$_4$ரதர்ஷப$_4$ ||***

இதில் சிலர் கடனாலும், சிலர் நோய்களாலும் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாக தமது துக்க நிவாரணத்தை வேண்டியவராக தரிசனத்திற்கு வருகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் குருநாதர் தமது ஆசீர்வாதங்களை வாரிவழங்குவதுடன் அவரவருக்கு ஏற்றதாக சாஸ்த்திரங்களில் போதிக்கப்பட்டுள்ள வழிகளை உபதேசிப்பதன் மூலம் அவர்களின் துக்கங்களை நிவாரணம் செய்கிறார்கள். குருநாதரின் கருணைக்கடலில் மூழ்கி திளைத்த பக்தர்களின் திடமான நம்பிக்கை என்னவெனில் "எங்களுடைய கஷ்டங்கள் எல்லாம் ஜகத்குரு அவர்களின்





WWW.SRINGERI.NET

சரணாரவிந்தங்களை தஞ்சமடையும் வரைதான். எப்போது நாம் குருநாதரின் சரணாரவிந்தங்களை தஞ்சமடைகிறோமோ அப்போதே அவர்களின் அருளால் எங்கள் கஷ்டங்கள் எல்லாம் விலகி நாங்கள் நன்மைகளை அடைகிறோம்" என்பது பக்தர்கள் ஒவ்வொருவரின் அனுபவமாகும். குருநாதர் தமது அமிர்தமான உபதேசங்களாலும் தவறாத ஆசீர்வாதங்களாலும் துன்புற்றவர்களின் துயர் தீர்க்கிறார்கள்.

தினந்தோறும் ஞான வேட்கை உள்ள பலர் குருநாதரின் தரிசனத்திற்காக வருகிறார்கள். சிலர் தர்மசாஸ்த்திர விஷயங்களிலும் சிலர் புராணங்களிலும் சிலர் வேதங்களிலும் சிலர் நியாய சாஸ்த்திரங்களிலும் சிலர் வேதாந்த தத்துவம் குறித்தும் பற்பல சந்தேஹங்களை ஸமர்ப்பித்து விடைகளுக்காகப் பிரார்த்திக்கின்றனர். குருநாதர் அவரவர்களின் தகுதிக்கேற்ப தர்ம தத்துவங்களையும் பிரஹ்ம தத்துவங்களையும் உபதேசித்து உரிய விடையை அதன் பிரமாணத்துடன் கூறி அவர்களுடைய அஞ்ஞானத்தையும் சந்தேஹத்தையும் நீக்குகிறார்கள்.

அவ்வாறே தினந்தோறும் தர்மகாரியங்களுக்காக பலர் குருநாதரிடம் உதவிவேண்டி வருகிறார்கள். நாட்டில் எங்கெங்கெல்லாம் பகவானுக்கு ஆலயம் நிர்மாணிக்கப்படுகிறதோ, பசுக்கள் காப்பாற்றப் படுகின்றனவோ, வேத – சாஸ்த்திரங்களின் பிரசாரம் செய்யப்படுகின்றதோ, ஏழைகளுக்கு



WWW.SRINGERI.NET

உதவி செய்யப்படுகிறதோ அங்கெல்லாம் அந்தந்த காரியங்களுக்காக சாரதா பிரஸாதமான நன்கொடை அளிப்பதின் மூலமும், தவறாத ஆசீர்வாதங்களினாலும், கருணைக் கடாக்ஷத்தாலும் அக்கார்யங்களைச் செய்பவர்களை அனுக்கிரஹித்து ஊக்குவிக்கிறார்கள்.

இன்னும் சிலரோ எனில் தினந்தோறும் குருநாதரை தரிசனம் மட்டும் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் வருகிறார்கள். வேறெதையும் அடையவேண்டுமென்ற எண்ணம் இவர்களுக்கில்லை. குருநாதரின் தரிசனம் கிடைத்தால் போதும். அவர்களுக்கும் குருநாதர் அனுக்கிரஹம் செய்கிறார். இவ்வாறு குருநாதர் எப்போதும் பரோபகாரத்தில் ஈடுபட்டுள்ளார் என்பதை நம்மால் உணரமுடிகிறது.

WWW.SRINGERI.NET

# ஜப பூஜாதி தத்பர:

ஸத்குருவின் அடுத்த லக்ஷணம் என்னவென்றால் ஜப பூஜாதி தத்பர: என்பதாகும். ஜபம், பூஜை முதலியவற்றில் ஈடுபட்டுள்ளவர் என்பது இதன் பொருள். குருநாதர் தினந்தோறும் தமது அனுஷ்டானங்களையும் ஸ்ரீ சாரதா சந்திரமௌளீச்வர பூஜையையும் செய்தருள்கிறார். மேலும் ஒவ்வொரு வருடமும் சைத்திர மாதத்தில் தொடங்கி பால்குன மாதம் வரைக்கும் ஸ்ரீராமநவமி, நரஸிம்ஹ ஜயந்தி, கோகுலாஷ்டமி, சாரதா நவராத்திரி, சிவராத்திரி முதலான பண்டிகை தினங்களில் பகவானை சாஸ்த்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் முறையில் சம்பிரதாயத்தின்படி பூஜிக்கின்றார். பரபிரஹ்மத்தில் நிலைபெற்றவராகவும் தமக்கென்று அடைவேண்டியதென்பது எதுவும் இல்லாதவராகவும், என்றும் எதிலும் திருப்தியுள்ளவராகவும் குருநாதர் விளங்குகிறார். அவர்களுக்கு இந்த பூஜைகளினாலும் விரதங்களினாலும் அடையவேண்டியதான பலன் என்று எதுவும் இல்லை. ஆயினும் உலகின் நன்மையை வேண்டியும், உலகோர் இந்த தேவதா கார்யங்களில் சிரத்தையுடன் ஈடுபட்டு பயனடைய வேண்டும்



WWW.SRINGERI.NET



என்பதற்காகவும் தாமே அவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக திகழ்ந்து கொண்டு இவற்றை அனுஷ்டித்துக் காட்டியருள்கிறார். சாஸ்த்திரத்தில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது, "அஞ்ஞானிகளை கர்மானுஷ்டானத்தில் ஈடுபாடுள்ளவர்களாகச் செய்யவேண்டுமென்பதற்காக ஞானிகளும் அதற்குத் தேவையான கர்மானுஷ்டானங்களைச் செய்யவேண்டும்." இதுதான் உலகிற்கு முன்மாதிரியாக திகழ்வதென்பதாகும். இதைத்தான் பகவானும் கீதையில்

**யத்$_3$ யதா$_3$ சரதி ஶ்ரேஷ்ட$_2$ ஸ்தத்ததே$_3$ வேதரோ ஜன: |**
**ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்தத$_3$ னுவர்ததே ||**

என்று கூறுகிறார். எல்லோரைக் காட்டிலும் பிரஹ்மஞானியானவர் மிகவும் உயர்ந்தவராகக் கருதப்படுகிறார். ஆகையால் அவர் உலகின் நன்மையைக் கருதி கர்மானுஷ்டானத்தில் ஈடுபட்டால் ஏனையோரும் அவரைப் பின்பற்றுவார்கள். சாஸ்த்திரத்தில் இது தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது,

"யதி$_3$ த்வம் ஜ்ஞானீ,

தர்ஹி ஸ்வப்ரயோஜநாபா$_4$வே(அ)பி லோகஸங்க்$_3$ரஹார்த$_2$ம் கர்மாண்யனுதிஷ்ட$_2$ |

யதி$_3$ நாஸி ஜ்ஞானீ,

WWW.SRINGERI.NET

*தர்ஹி ஸ்வப்ரயோஜனார்த$_2$மேவ கர்மாணி அனுதிஷ்ட$_2$"* இதன் பொருள் *"நீ ஞானியானால் உனக்கு எந்த வித பிரயோஜனம் இல்லாவிட்டாலும் பிறருக்கு உணர்த்துவதற்காக அவர்களுக்கு முன்மாதிரியாக கர்மானுஷ்டானங்களை ஆசரிப்பாய்! நீ ஞானியில்லை என்றால் உன்னுடைய நன்மைக்காக கர்மானுஷ்டானங்களைச் செய்வாய்!"*.

*பிரஹ்மத்தில் நிலைபெற்றவரான குருநாதர், தமக்கு எந்தவிதமான பிரயோஜனம் இல்லை என்றாலும் உலகிற்கு உணர்த்தவும், உலகின் நன்மைக்காகவும் ஒவ்வொரு வருடமும் பூஜை, விரதம் முதலானவற்றை அந்தந்த சமயங்களில் செய்தருள்கிறார். பகவானிடம் மக்களனைவரின் நன்மைக்காக பிரார்த்தனை செய்கிறார்.*

WWW.SRINGERI.NET

# அமோகவசன:

ஸத்குருவின் அடுத்த லக்ஷணத்தின் பொருள் அமோகமான வாக்கை உடையவர் என்பதாகும். இதன் பொருள் குருநாதரின் முககமலத்திலிருந்து ஆசீர்வாதமாக வெளிவரும் வாக்கானது எப்போதும் மோகமாகாது அதாவது பொய்க்காது. அமோகமாகவே இருக்கும் அதாவது அப்படியே பலித்துவிடும். இதைத்தான் காவ்வியத்தில் "ரிஷீணாம் புனராத்$_3$யானாம் வாசமர்தோ$_2$(அ) னுதா$_4$வதி" என்று கூறுகிறார்கள்.

மக்களில் பலர் ஏதோ ஒரு செயலைத்தொடங்கி பற்பல தடங்கல்களை அனுபவிக்க நேரிடும் போது சிருங்கேரிக்கு வந்து தமது செயல் எவ்வித தடங்கலும் இன்றி நிறைவடைய வேண்டுமென்று குருநாதரின் பாதகமலங்களில் பிரார்த்தனைகளை சமர்ப்பிக்கிறார்கள். அப்போது குருநாதர் மந்திராக்ஷதைகளை அளித்து "இச்செயல் இன்னும் முன்னர் எவ்வித தடையும் இன்றி நிறைவடையட்டும்" என்று ஆசீர்வதிக்கிறார்கள். அவ்வாறே அக்கார்யம் எவ்வித தடையுமின்றி முடிவடைவதை பிரத்யக்ஷமாகக் கண்டு அனுபவித்து பற்பல சிஷ்யர்கள் குருநாதரின் அனுக்கிரஹத்தையும் மஹிமையையும் உணர்ந்துகொண்டுள்ளனர்.

ஒருமுறை எங்கள் குருநாதர் விஜய யாத்திரை மேற்கொள்ள ஸங்கல்பித்தார். அப்போது குருநாதரின் பூர்வாசிரம தாயாரான மஹாமாதா தங்கிரால அனந்தலக்ஷ்ம்யம்மாள் குருநாதரை தரிசித்து, "தாங்கள் பதிமூன்று மாதங்கள் விஜய யாத்திரை மேற்கொள்ள ஸங்கல்பித்துள்ளீர்கள். நானோ வயதின் முதிர்வால் மிகவும் நலிவுற்றவளாக எதையும் செய்ய இயலாதவளாக உள்ளேன். தாங்கள் திரும்பி வரும்வரை இந்த சரீரத்தை தரித்துக்கொண்டு இருக்கமுடியுமா என்று சந்தேஹப்படுகிறேன்." என்று கூறினார். அப்போது குருநாதர், "நாங்கள் ஸங்கல்பித்தபடி விஜய யாத்திரையை முடித்துக்கொண்டு சிருங்கேரி திரும்புவோம். அப்போது தாங்கள் கண்டிப்பாக என்னைக்

WWW.SRINGERI.NET

காண வருவீர்கள், இவ்விஷயத்தில் சந்தேஹமே படவேண்டாம்" என்று கூறிவிட்டு, குருநாதர் விஜய யாத்திரையை மேற்கொண்டார்கள். அவர்களின் வசனத்தின் மேல் அபாரமான நம்பிக்கையுடன் அனந்தலக்ஷ்மியம்மாள் பகவானை தியானம் செய்துகொண்டு குருநாதரின் யாத்திரை முடிவடையும் நாளுக்காக காத்திருந்தார். குருநாதர் தக்ஷிணபாரதத்தில் 13 மாதங்கள் விஜய யாத்திரையை முடித்துக்கொண்டு சிருங்கேரிக்குத் திரும்பினார். சிருங்கேரிக்கு திரும்பிய மறுதினமே அனந்தலக்ஷ்மியம்மாள் குருநாதரை தரிசித்து மிகுந்த சந்தோஷத்தையும் வாழ்வின் பயனையும் அடைந்தவராக உணர்ந்தார். அன்றிலிருந்து இரண்டே நாட்களுக்குள் அனந்தலக்ஷ்மியம்மாள் தங்களுடைய சரீரத்தை விட்டுவிட்டு புண்ணியலோகத்தை சென்றடைந்தார்கள். இவ்வாறான அமோகவசனத்தை, பொய்யா வாக்கை குருநாதரிடம் கண்டுணரமுடியும்.



WWW.SRINGERI.NET

# சாந்த:

ஸத்குருவின் அடுத்த லக்ஷணம் சாந்த: என்பதாகும். சாந்தமானவர் என்பது இதன் பொருள். எவரால் காமம், கோபம், லோபம் (பேராசை), மோஹம், மதம் (கர்வம்), மாத்ஸர்யம் (பொறாமை) ஆகிய ஆறு வகையான மனிதனின் உட்பகைவர்கள் ஜயிக்கப்பட்டனரோ அவரே சாந்தமானவர் என்று அழைக்கப்படுகிறார். மஹாபுருஷர்கள் காமம், கோபம் முதலியவற்றை வென்று தூய மனதுடையவர்களாக மக்களனைவரையும் தமது கடைக்கண் பார்வையாலும் அமிர்தம் போன்ற உபதேசங்களாலும் அருள்கின்றனர். காமம், கோபம் முதலியவற்றில் மூழ்கியிருக்கும் மூடர்களோ, பறபல கெட்ட செயல்களைச் செய்கின்றனர், அதனால் துக்கத்தை அனுபவிக்கின்றனர். ஆகையால் தான் பகவான் பகவத்கீதையில்

**த்ரிவித$_4$ம் நரகஸ்யேத$_3$ம்**

**த்$_3$வாரம் நாஶனமாத்மன: |**

**காம: க்ரோத$_4$ஸ்ததா$_2$ லோப$_4$ஸ்-**

**தஸ்மாதே$_3$தத் த்ரயம் த்யஜேத் ||**

என்று காமம், கோபம் முதலானவற்றை நரகத்தின் கதவுகளாகக் கூறியுள்ளார். இந்த உட்பகைவர்கள் வெளிப்பகைவர்களைக் காட்டிலும் மிகவும் கெடுதல் விளைவிப்பவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் இந்த உட்பகைவர்களை நாம் வெல்லவேண்டும். இந்த உட்பகைவர்களை வென்றுவிட்ட குருநாதர் சாந்தமானவராக விளங்கிக்கொண்டு சிஷ்யர்களுக்கு நல்லுபதேசங்களை செய்துவருகிறார். மேலும் சிஷ்யர்களின் நன்மை ஒன்றைத் தவிர வேறெதையும் விரும்பமாட்டார்.

WWW.SRINGERI.NET


குருநாதரின் தரிசனத்திற்காக ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சர் முதலான பல பிரமுகர்கள் அவ்வப்போது வருவார்கள். அவர்களுக்கு குருநாதர் தமது அபரிமிதமான ஆசிகளை வழங்கியருள்கிறார். அவர்களிடம் தமக்காக எதுவும் கேட்பதில்லை. ஒருமுறை கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சர், குருநாதரை தரிசனம் செய்து, கர்நாடக அரசாங்கத்தின் சார்பாக சிருங்கேரி ஸ்ரீ மடத்தின் அபிவிருத்திக்காக ஒரு பெரிய தொகையை ஸமர்ப்பிக்க விரும்பினார். அப்போது குருநாதர் "ஸ்ரீ மடத்திற்கு தேவையானவை அனைத்தும் ஸ்ரீ சாரதாம்பாளின் அனுக்கிரஹத்தினால் கிடைக்கிறது. ஆகையால் இந்தத் தொகையை மக்களின் மேம்பாட்டிற்காக பயன்படுத்துங்கள்" என்று கூறினார். அந்த வார்த்தையைக் கேட்ட முதலமைச்சர் மிகவும் வினயத்துடன் அவ்வாறே செய்வதாக பதிலளித்தார். இவ்வாறு காமம் கோபம் முதலானவை அற்ற சாந்தமாக இருக்கும் தன்மையை குருநாதரிடம் நம்மால் கண்டுணரமுடியும்.



WWW.SRINGERI.NET

# வேத வேதாங்க பாரக:

அடுத்த லக்ஷணம் "வேத வேதாங்க பாரக:" என்பதாகும். வேதம் வேதத்தின் அங்கங்களான சிக்ஷா, வ்யாகரணம் சந்தஸ் முதலானவற்றில் கரைகண்டவர் என்பது இதன் பொருள். ஒவ்வொரு வருடமும் சங்கர ஜயந்தி உத்ஸவத்தின் போது சிருங்கேரியில் வேதஸபை நடைபெறுகிறது. இச்சபையில் பாரதத்தின் பல பகுதிகளிலிருந்து தத்தமது வேதங்களில் சிறந்த பண்டிதர்களாக விளங்கும் வேதவிற்பன்னர்கள் மிகுந்த உத்ஸாஹத்துடன் பங்குபெறுகிறார்கள். குருநாதரின் எதிரில் தமது வேதசாகையை பாராயணம் செய்து அவர்களை மிகவும் மகிழ்விக்கிறார்கள். குருநாதர் அந்தந்த வேதங்களில் பாராயணம் செய்வதற்குரிய பாகங்களை தாமே எடுத்துக் கொடுக்கிறார், அதைப் பண்டிதர்கள் மிகுந்த உத்ஸாஹத்துடன் சொல்கிறார்கள். குருநாதர் வேதத்தில் எந்த அனுவாகத்தை தேர்ந்தெடுத்து பாராயணம் செய்ய உத்தரவிடுவார்களோ அதைக் கேட்டவுடன் பண்டிதர்கள் "நாம் பரீக்ஷை கொடுப்பதற்கு வந்தபோது இம்மாதிரியான கடினமான பகுதிகளைச் சொல்லுமாறு பரீக்ஷை




WWW.SRINGERI.NET

செய்பவர்கள் கேட்பார்கள். இவற்றை நன்றாக சொல்லத்தெரிந்தவர்கள் பரீக்ஷையில் நிச்சயமாக வெற்றி பெறுவார்கள். ஆகையால் ஜகத்குரு அவர்களின் ஸன்னிதியில் இப்பொழுதும் நமக்கு பரீக்ஷை நடக்கிறது'' என்று எண்ணுகிறார்கள். மேலும் குருநாதரின் எதிரில் இப்பகுதிகளை பாராயணம் செய்வது தமக்கு கிடைத்த பெரும் பாக்கியமாக அப்பண்டிதர்கள் கருதுகிறார்கள்.



நான் பிரஹ்மசாரியாக இருந்தபோது நரஸிம்ஹவனத்தில் எங்களுடைய பரமகுரு, பரமேஷ்டிகுரு, பராபர குருநாதர்களின் அதிஷ்டான மந்திரத்தில் (ஸமாதி கோவிலில்) படித்துக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் குருநாதர் அதிஷ்டானத்தில் தர்சனம் செய்வதற்காக வந்து கொண்டிருந்தார். அப்போது அங்கு படித்துக்கொண்டிருக்கும் நான், குருநாதரின் தரிசனத்தையும் அடைந்துகொண்டிருந்தேன். ஒருநாள் அதிஷ்டானத்திற்கு வந்து தரிசனம் செய்து முடித்தவுடன், அவர்களின் எதிரில் நமஸ்காரம் செய்யும் என்னைப் பார்த்து ''இன்று என்ன கிழமை?'' என்று கேட்டார். நான் ''இன்று ஞாயிற்றுக்கிழமை'' என்று சொன்னேன். அதற்கு அவர்கள் ''ஞாயிற்றுக்கிழமைகளில் அருணப்பிரச்னம் பாராயணம் செய்வது மிகவும் உயர்வானது. நீ ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அருணப்பிரச்னத்தை பாராயணம் செய்கிறாயா?'' என்று கேட்டார். அதற்கு நான் ''நியமமாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இதைப் பாராயணம் செய்வதில்லை'' என்றேன். உடனே குருநாதர் ''இன்று முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் உன்னால் நியமமாக அருணப்பிரச்னத்தின் பாராயணம் செய்யப்பட

வேண்டும்” என்று உத்தரவிட்டார். நான் உடனடியாக ஸாஷ்டங்க நமஸ்காரம் செய்து அவ்வாறே செய்கிறேன் என்று அவர்களிட்ட கட்டளையைத் தலையால் ஏற்றேன். அப்போது அவர்கள் “இப்போதே பாராயணத்தை ஆரம்பிப்பாய்! நாம் இங்கேயே அமர்ந்து அதைக் கேட்போம்” என்றார்கள். அதன்படியே நான் குருநாதரின் எதிரிலேயே அருணப்பிரச்னம் முழுவதையும் பாராயணம் செய்து முடித்தேன். மறுநாள் அதிஷ்டானத்திற்கு வந்த குருநாதர் என்னிடம் “இன்று திங்கட்கிழமை. திங்கட்கிழமைகளில் ஸ்வாத்யாய பிராஹ்மண பிரச்னத்தைப் பாராயணம் செய்யவேண்டும். ஆகையால் இப்போதே அதை ஆரம்பிப்பாய். நாம் இங்கேயே அமர்ந்து அதைக் கேட்போம்” என்று கூறினார். உடனே நான் அப்பாகத்தைப் பாராயணம் செய்தேன். இந்த ஸ்வாத்யாய பிராஹ்மண பிரச்னத்தில் கடைசி பிரச்னைக்கு முன்னுள்ள பிரச்னையின் இறுதி வாக்கியங்களில் “நமோ நம: ஶிஶுகுமாராய நம:” என்கிற மந்திரம் இருக்கிறது. அதை நான் எப்போது சொல்லிக்கொண்டிருந்தேனோ, அப்போது குருநாதர், “நமோ நம: ஶிஶுகுமாராய நம: என்பதில் கடைசியில் உச்சரிக்கப்படும் நம: என்ற சொல்லின் இறுதியிலுள்ள ‘அ’காரத்திற்கு எந்த ஸ்வரம் உச்சரிக்கப்படுகிறது? ஸ்வரிதமா? அல்லது உதாத்தமா?” என்று கேட்டார். நான் உடனடியாக “அந்த மகாரத்தின் பின் உள்ள அகாரத்திற்கு உதாத்த ஸ்வரம் தான்” என்று சரியாக பதிலளித்து விட்டாலும் என் மனதில்



சிறியதொரு சந்தேஹம் இருந்தது. ஆகையால் நான் குருநாதரிடம் "நான் படிக்கும் போது உதாத்த ஸ்வரம் சொல்வதற்குத் தான் பயின்றிருக்கிறேன். ஆயினும் ஒரு சிலர் இவ்விடத்தில் ஸ்வரித ஸ்வரம் சொல்கிறார்கள். சில புஸ்தகங்களிலும் ஸ்வரித ஸ்வரம் அச்சிடப்பட்டுள்ளது. இங்கு எது சரியான ஸ்வரம் என்று எவ்வாறு நிர்ணயிப்பது?" என்று கேட்டேன். உடனே குருநாதர்,

**ஆரண்யகே து வாக்யாந்தே**

**உதா₃த்தோ நம உச்யதே |**

**நோபதே-வை-மஹோ-ஜாய-**

**ஸேப்₄ய: பூர்வோ விகா₃: க்ரமாத் ||**

என்ற ஆரண்யக சிக்ஷா நூலிலுள்ள சுலோகத்தைக் கூறினார். தைத்திரீய ஆரண்யகத்தில் குறிப்பிட ஒரு சில இடங்களைத் தவிர பிற இடங்களில் எங்கெங்கெல்லாம் நம: என்ற சப்தம் வாக்கியத்தின் இறுதியில் வருகிறதோ அங்கெங்கெல்லாம் இறுதியில் உதாத்தஸ்வரம்தான் உச்சரிக்கப்படவேண்டும். இறுதியில் ஸ்வரிதம் உச்சரிக்கப்பட வேண்டிய குறிப்பிட்ட சில இடங்கள் மேல் சொன்ன சுலோகத்தில் "நோபதே-வை- மஹோ-ஜாய-ஸேப்₄ய: பூர்வோ விகா₃: க்ரமாத்" என்பதில் கணக்கிடப்பட்டுள்ளது. "நோபதே = ந + உபதே" என்று முதலில் "உபதே நம:" என்ற இடத்தில் நம: என்ற சொல் வாக்கியத்தின் முடிவிலிருந்தாலும் அதை ஸ்வரித ஸ்வரமுள்ளதாகவே உச்சரிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதேபோல் அடுத்ததான "வை" என்பதற்கு "விஶ்வரூபாய வை நமோ நம:" என்ற இடத்தில், "மஹோ" என்பதற்கு "மஹோ நமோ நம:" என்ற இடத்தில், "ஜாய" என்பதற்கு "மஹாராஜாய நம:" என்ற இடத்தில் மற்றும் "ஸே" என்பதற்கு "ஸுதரஸி தரஸே நம:" என்ற இடத்தில் என் இவ்விடங்களிலெல்லாம் உச்சரிக்கப்படும் நம: என்ற சொல்லில் மகாரத்திற்கு ஸ்வரித ஸ்வரம் தான் உச்சரிக்கவேண்டும். மேலும் சுலோகத்திலுள்ள "விகா₃:" என்பதற்கு மந்திரபிராஹ்மண பிரச்னத்தில் "விகா₃ இந்த்₃ர விசரந்த்₂ஸ்பாஶயஸ்வ" என்ற அனுவாகத்தில் "ஸக்ருத்தே அக்₃னே நம: | த்₃விஸ்தே நம: | த்ரிஸ்தே நம: | சதுஸ்தே நம: | பஞ்சக்ருத்வஸ்தே நம: | த₃ஶக்ருத்வஸ்தே நம: | ஶதக்ருத்வஸ்தே நம: | ஆஸஹஸ்ர- க்ருத்வஸ்தே நம: | அபரிமிதக்ருத்வஸ்தே நம:" என்ற வாக்கியங்களிலெல்லாம் பலதடவை உச்சரிக்கப்படும் நம: என்ற சொல் அனைத்தையும் ஸ்வரித ஸ்வரமுள்ளதாகவே உச்சரிக்கவேண்டும்



WWW.SRINGERI.NET


என்று கூறப்பட்டுள்ளது. ஆரண்யகத்தில் இங்கு சொல்லப்பட்ட இடங்கள் தவிர "நித$_4$னபதயே நம:" "மனோன்மனாய நம:" முதலான பிற இடங்களில் உச்சரிக்கப்படும் இந்த "நம:" என்ற சொல்லை உதாத்த ஸ்வரமுள்ளதாகவே உச்சரிக்கவேண்டும் என்று இந்த சுலோகத்தின் தாத்பர்யத்தை குருநாதர் விவரித்தார். அப்போது, ஸ்வரங்களைப் பற்றிய விஷயத்திலிருந்த என்னுடைய ஸந்தேஹம் முற்றிலும் நீக்கப்பட்டது. என்னுடைய முன்செய்த பயிற்சியின் பலனாக அன்று வரை அவ்வவ்விடங்களில் சரியாக உதாத்த மற்றும் ஸ்வரித ஸ்வரங்களை நான் உச்சரித்துக்கொண்டு வந்திருந்தாலும் குருநாதரின் தெள்ளத்தெளிவான உபதேசத்தால் ஸ்வரவிஷயத்தில் இருந்த ஸந்தேஹம் நீங்கி தெளிவான ஞானத்தை அடைந்தேன்.

மற்றொருநாள் இரவு சந்திரமௌளீச்வர பூஜை வேளையில் தைத்திரீய ஸம்ஹிதையின் இரண்டாம் காண்டத்தில் ஐந்தாவது பிரச்னையில் "ஏஷ வை தே$_3$வரதோ$_2$ யத்$_3$த$_3$ர்ஶபூர்ணமாஸௌ" என்ற வாக்கியத்தின் க்ரம பாடத்தை நான் பாராயணம் செய்தேன். அதன் மறுநாள் காலை தரிசனம் கொடுக்கும் வேளையில் குருநாதர், "நேற்று நீ 'ஏஷ வை தே$_3$வரத$_2$:' என்ற அனுவாகத்தின் க்ரம பாடத்தை பாராயணம் செய்தாயல்லவா? அந்த அனுவாகத்தில் "த$_3$ர்ஶபூர்ணமாஸௌ" என்ற சொல் எத்தனை முறை வருகிறது?" என்று கேட்டார். நான் அந்த அனுவாகத்தை மனப்பாடமாக சொல்வதற்கு பயின்றுள்ளேன், ஆயினும் இந்த சொல் எவ்வளவு முறை வருகின்றதென்று ஒருப்போதும் சிந்தித்ததில்லை. குருநாதர் கேட்டவுடனே கணக்கிடத் தொடங்கினேன். அதைப் பார்த்த குருநாதர் "இப்போது கணக்கிட வேண்டாம். இதற்கு மிகுந்த நேரம் செலவிடவேண்டிவரும். மொத்தம் 19 முறை வருகிறது" என்று தாமே பதில் கூறிவிட்டு "உன் தங்குமிடத்திற்குச் சென்று கணக்கிட்டுப்பார்" என்று கூறினார். நான் தங்குமிடத்திற்கு வந்து மெதுவாகக் கணக்கிட்டேன். சரியாக 19 முறை தான் "த$_3$ர்ஶபூர்ணமாஸௌ" என்ற சொல் அந்த அனுவாகத்தில் வந்திருப்பதைக்கண்டு வியந்துபோனேன். இவ்வாறே வேதத்தில் எந்த யாகம் எந்த பிரச்னத்தில் கூறப்பட்டுள்ளது, அதன் யாஜ்யா-புரோனுவாக்யங்கள் எங்கு உபதேசிக்கப்பட்டுள்ளன என்பனவற்றில் அவர்களுக்கு அஸாதாரணமான பாண்டித்தியம் உள்ளது. இவ்வாறே வேதபாஷ்யத்திலுள்ள பற்பல விஷயங்களை அவர் நுண்ணிய முறையில் ஆராய்ந்து நுட்பமான கருத்துக்களைத் தெள்ளிய முறையில் விளக்குவார். இவ்வாறு வேதங்களிலும் வேதபாஷ்யத்திலும் மற்றும் வேதாங்கங்களிலும் ஈடுஇணையற்ற பாண்டித்தியத்துடன் விளங்கிவருபவர் நம் குருநாதர்.

WWW.SRINGERI.NET

# யோகமார்கானுஸந்தாயீ

ஸத்குருவின் அடுத்த லக்ஷணம் யோகமார்கானுஸந்தாயீ என்பதாகும். அஷ்டாங்கயோகத்தில் ஈடுபட்டிருப்பவர் என்பது இதன் பொருள். யோகிகளுள் தலைசிறந்தவரான குருநாதர், தமது யோகசக்தியாலேயே வேறிடங்களில் இருக்கும் சிஷ்யர்களின் மனதிலுள்ள பிரார்த்தனைகளை அறிந்துகொண்டு அவர்களுக்கு அனுக்கிரஹம் செய்கிறார்கள்.



WWW.SRINGERI.NET

குருநாதர் ஒவ்வொரு வருடமும் சிராவண மற்றும் கார்த்திக மாதங்களின் திங்கட் கிழமைகளில் மத்தியானம் பகவான் ஸ்ரீ சந்திரமௌலீச்வரருக்கு விசேஷ சோமவார மஹாபூஜையை நிகழ்த்துகிறார். நான் பிரஹ்மசாரியாக இருந்த சமயத்தில் ஒருமுறை, சோமவார பூஜை இருந்த நாளன்று எனக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. பூஜை ஆரம்பிப்பதற்கு சுமார் 30 நிமிஷங்கள் இருந்த நிலையில் “இவ்வாறான உடல்நிலையில் எவ்வாறு பூஜைக்குச் செல்வது” என்ற கவலையில் நான் ஆழ்ந்தேன். என்னுடைய இருப்பிடத்திலேயே மிகுந்த மனக்கவலையுடன் குருநாதரின் பாதாரவிந்தங்களை நான் தியானித்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டு அமர்ந்தேன். சில நிமிடங்களில் ஒரு காட்சி எனக்குத் தெரிந்தது. அதில் குருநாதர் சந்திரமௌளிச்வர பூஜையை செய்தருளிக்கொண்டிருந்தார். பூஜையை செய்துகொண்டே என்னைப் பார்த்து “நீ கவலைப்பட வேண்டியதில்லை. இப்பொழுதே கிளம்பி பூஜைக்கு வா” என்று கூறினார்.

உடனே நான் கண்களைத் திறந்தேன். இதற்கு முன் என்னுடைய சரீரத்தில் எந்த ஒரு உபாதை இருந்ததோ அது இருந்ததற்கான அடையாளமே இல்லாமல் போனது. அப்போது நான் பரிபூரணமாக ஆரோக்கியத்தை அடைந்திருந்தேன். உடனே என்னுடைய இருப்பிடத்திலிருந்து புறப்பட்டு மிக வேகமாக குருநிவாஸிற்கு பூஜையை தரிசிப்பதற்காகச் சென்றேன். நான் குருநிவாஸை அடைந்த பொழுது தான் பகவான் ஸ்ரீ சந்திரமௌலீச்வரருடைய பூஜையை குருநாதர் செய்ய ஆரம்பித்திருந்தார்கள். குருநாதரின் அனுக்கிரஹத்தால் என்றும் போல் அன்றும் பூஜையில் கலந்துகொண்டு தரிசித்துப் பயனடைந்தேன்.

இவ்வாறு சிஷ்யர்கள் வேறிடங்களிலிருந்துகொண்டு பக்திசிரத்தைகளுடன் மனதில் பிரார்த்தித்தாலும் கூட, அப்பிராத்தனையைத் தவறாமல் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு குருநாதர் அனுக்கிரஹம் செய்வதைப் பலர் பலமுறை பல்வேறு விதங்களில் அனுபவித்திருக்கிறார்கள். இவ்வாறான சக்தி குருநாதரிடம் உள்ளது. ஆகையால் அவர்கள் யோகத்தில் தலைசிறந்தவர்.

WWW.SRINGERI.NET

# தேவதா-ஹ்ருதயங்கம:

ஸத்குருவின் அடுத்த லக்ஷணமாக சொல்லப்பட்டிருப்பது தேவதா-ஹ்ருதயங்கம: என்பதாகும். இதன் பொருள் ஸத்குருவானவர் தேவர்களாலும் மதிக்கப்படுபவர். உலகத்தில் ஒருவன் தெரிந்தோ தெரியாமலோ தேவதைகளின் விஷயத்தில் அபராதம் செய்தானென்றால் அதனால் தேவதைகளின் கோபத்திற்கு ஆளாகிறான். தான் இழைத்த தவறுக்காக பின்னர்



WWW.SRINGERI.NET

மனம் வருந்தி தேவர்களின் கோபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்கிறான். ஒருவரின் கோபத்திலிருந்து விடுபட வேண்டுமானால் செய்த தவறுக்காக அவரிடம் தஞ்சமடைந்து மன்னிப்புக் கேட்கவேண்டும். ஆனால் தேவர்களை நேரில் கண்டு கொள்ள முடியாது. பின்னர் "எவ்வாறு மன்னிப்புக் கேட்க முடியும்? அவர்களை எப்படி சந்தோஷப்படுத்த முடியும்?" என்று கேட்டால் அப்படிப்பட்ட தவறிழைத்தவன் மேல்கூறிய அனைத்து லக்ஷணங்களையும் பொருந்திய ஸத்குருவை தஞ்சம் அடைய வேண்டும். எல்லா சாஸ்திரங்களிலும் கரைகடந்தவரான அந்த ஸத்குருவானவர், அவன் செய்த தவறு என்ன என்பதை அறிந்துகொண்டு அவனுக்கு தேவர்களின் கோபதத்தை தணிப்பதற்காக சாஸ்த்திரத்தில் கூறப்பட்ட வழியை உபதேசித்து அனுக்கிரஹிப்பார். அவனும் குருநாதர் உபதேசித்தபடியே செய்ய வேண்டியவற்றை சிரத்தையுடன் நன்றாகக் கடைப்பிடித்து தேவர்களின் கோபத்திலிருந்து விடுபட்டு அவர்களின் அனுக்கிரஹத்தை அடையும் தகுதி பெறுகிறான். இவ்வாறு குருநாதர் சிஷ்யர்களைக் காப்பாற்றுகிறார். இதையே முன்னோர்கள் "தை³வே ருஷ்டே கு³ருஸ்த்ராதா" (தெய்வம் கோபித்தால் காப்பவர் குரு). என்று கூறினார்கள். ஆகையால் ஸத்குருவானவர் தேவர்களாலும் பூஜிக்கத்தகவர். அப்பேர்ப்பட்ட குருவின் விஷயத்தில் சிஷ்யனானவன் ஒருபோதும் தவறிழைக்கக் கூடாது. தேவர்கள் கோபித்தால் குருவானவர் காப்பாற்றுவார். குரு கோபித்தால் காப்பவர் மூன்று லோகங்களிலும் இல்லை. அதனால் தான் "கு³ரௌ ருஷ்டே ந கஶ்சன" (குருவானவர் கோபித்தால் காப்பவர் எவருமில்லை) என்று முன்னோர்கள் கூறினர். ஆகையால் சிஷ்யனானவன் மிகுந்த சிரத்தையுடன் குருசேவை செய்யவேண்டும். குருவிற்கு எவ்விதத்திலும் கோபத்தை உண்டுபண்ணக்கூடாது.

இவ்வாறு சாஸ்த்திரத்தில் சொல்லப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட அனைத்து லக்ஷணங்களும் பொருந்தியவரும், அனைத்து சாஸ்த்திரங்களில் கரைகண்டவரும், ப்ரஹ்மத்தில் நிலைத்து நிற்பவருமான எங்களது குருநாதர் ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அவர்கள், அனைத்து மக்களையும் அனுக்கிரஹித்துக்கொண்டு தக்ஷிணாம்நாய ஸ்ரீ சாரதாபீடத்தின் 36-ஆவது பீடாதீச்வரராக விளங்கிவருகிறார்கள். நற்குணங்களின் கடலான அவர்களின் மஹிமைகளில் ஒரு துளியை மட்டும் இங்கு எடுத்துக்காட்டியுள்ளேன். முழுவதுமாக எழுத வேண்டுமென்றால் ஆயிரம் பக்கங்கள் கூடப் போறாது என்றே எண்ணுகிறேன். இப்பேர்ப்பட்ட ஜகத்குருவை தரிசித்து சேவித்து பிறவிப் பயனடைவோம்.

## *திவ்யஸப்ததி பூர்த்தி மஹோத்ஸவம் (71வது வர்தந்தி)*

*இந்தப்லவவருடத்தின்சைத்திர-சுக்ல-ஷஷ்டிஅன்றுஅவர்களுடைய71-ஆவது வர்தந்தி மஹோத்ஸவமானது மிகுந்த வைபவமாக ஆசரிக்கப்படுகிறது. இங்கு வைபவம் என்ன என்று கேட்டால் இந்த ஸந்தர்பத்தை ஒரு நிமித்தமாக வைத்துக்கொண்டு சாஸ்த்திரங்களில் சொல்லப்பட்டவாறு பலவிதமான உலகத்திற்கு நன்மை அளிக்கக்கூடிய மற்றும் பகவானுக்குப் பிரீதியை அளிக்கக்கூடிய பூஜை, ஜபம், ஹோமங்கள் முதலியவற்றின் அனுஷ்டானத்தை நிகழ்த்துவதாகும். இதல்லாமல் வேறு ரீதியாக பணத்தை விரயம் செய்து இந்திரியங்களின் சுகத்தை மட்டுமடைவதென்பது போலி வைபவம் ஆகும். எல்லாப் பற்றையும் துறந்தவரும், பரம வைராக்கியத்தின் களஞ்சியமும் தமது சரீரத்தில் கூட சிறிதும் மமகாரம் இல்லாதவர் எங்கள் குருநாதர். அவர்கள் தமது வர்த்தந்தி உத்ஸவம் என்றழைக்கப்படும் தமது ஜனன தினத்தை சிஷ்யர்கள் வைபவமாக ஆசரிக்கவேண்டும் என்ற விருப்பம் இல்லாவிட்டாலும், உலகிற்கு நன்மை அளிக்ககூடிய மேல்கூறப்பட்ட தார்மிக ஆசரணைகளை நிகழ்த்துவதற்காக உத்தரவளித்தார். இச்சந்தர்பத்தில் அயுதசண்டீ மஹாயாகம், அதிருத்திர மஹாயாகம், ஸ்ரீ சாரதாம்பாவிற்கு கோடிகுங்குமார்ச்சனை முதலான பலவிதமான பகவானுக்கு பிரீதியை அளிப்பவைகளான மேலும் லோகத்திற்கு நன்மையை அளிப்பவைகளான ஆசரணங்கள் சாஸ்த்திரத்தில் கூறப்பட்டுள்ள விதிகளின் படி சிருங்கேரியில் அனுஷ்டிக்கப்படுகின்றன. இதே சமயத்தில் வேத-சாஸ்திர-புராண-இலக்கியங்களில் திறமை வாய்ந்த 70 பேர்களுக்கு ஸ்ரீபாரதீதீர்த்த புரஸ்காரம் வழங்குதல், ஏழை எளியவர்களுக்கு உதவிகள் வழங்குதல் முதலான நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இந்த வர்தந்தி உத்ஸவத்தின் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால் வஸந்தகாலத்தில் ஆசரிக்கப்படுகிறது. மஹாத்மரான எங்கள் குருநாதர் வஸந்த ருதுவிற்கு நிகரானவர். வஸந்த காலமானது தனக்காக எந்த பிரயோஜனத்தையும் எதிர்பார்க்காமல் அனைத்து மனிதர்களுக்கும் பிராணிகளுக்கும் ஹிதத்தைச் செய்கிறது. மஹாத்மர்களும் தமக்காக எந்த ஒரு பிரயோஜனத்தையும் எதிர்பார்க்காமல் அனைத்து மக்களையும் அனுக்கிரஹிக்கிறார்கள். ஆகையால் தான் ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்,*

***ஶாந்தா மஹாந்தோ நிவஸந்தி ஸந்தோ***

***வஸந்தவல்லோகஹிதம் சரந்த: |***

***தீர்ணா: ஸ்வயம் பீ$_4$மப$_4$வார்ணவம் ஜனாந்***

***அஹேதுனான்யானபி தாரயந்த: ||***

என்று கூறியுள்ளார். இதன் பொருள் சாந்தமான ஸ்வபாவமுள்ள மஹாத்மாக்கள் வஸந்தருதுவைப் போல் அனைவருக்கும் ஹிதத்தைச் செய்துவருகிறார்கள். ஸம்ஸார கடலைக் கடந்தவர்களான அவர்கள் பிறரையும் எவ்வித பிரயோஜனத்தையும் கருதாமல் கடக்கச் செய்கிறார்கள். வஸந்த காலத்திற்கு நிகரான எங்கள் குருநாதரின் வர்தந்தி உத்ஸவமானது இந்த வஸந்த காலத்தில் நடைபெறுகிறதென்பதால் வஸந்தருதுவின் மற்றும் அதற்கு நிகரான குருநாதரின் கிருபையையும் ஒரே சமயத்தில் நம்மால் அடைய முடிகறது. இச்சந்தர்பத்தில் அனந்தஸ்ரீவிபூஷிதரான எங்கள் குருநாதர் அவர்களின் சரணாரவிந்தங்களில் பக்தி சிரத்தைகளுடன் நமஸ்காரங்களை சமர்ப்பித்து, அவர்களின் பரமானுக்கிரஹத்தினால் எல்லா ஆஸ்திகர்களும் அனைத்து விதமான நன்மைகளை அடைந்து வாழ்வில் உயர்வடையட்டும்; அனைவரின் துக்கங்கள் தூரமாகட்டும்; ஹிந்து மதம் என்றழைக்கப்படும் நமது ஸனாதன வைதிக தர்மம் செழிக்கட்டும்; நமது தேசம் செழிக்கட்டும்; என்று பிரார்த்தித்து அனைவருக்கும் எங்களுடைய நாராயண ஸ்மரண பூர்வகமான ஆசிகளை வழங்குகிறோம்.

WWW.SRINGERI.NET

# கு3ருவர்யத3ஶஶ்லோகீ

## ஜக3த்3கு3ரு-ஶ்ரீவிது4ஶேக2ரபா4ரதீமஹாஸ்வாமிபி4: விரசிதா

*த3க்ஷிணாம்நாயஶ்ரு1ங்கே3ரீஶாரதா3பீட2பூ4ஷணம் |*
*நமாமி பா4ரதீதீர்த2ம் த3க்ஷிணாஸ்யநவாக்ரு1திம் ||1||*

*கருணாரஸநிஷ்யந்தி3ஸரஸாபாங்க3வீக்ஷணம் |*
*கடாக்ஷபாதநிர்தூ4தபாபௌக4ம் கலயே கு3ரும் ||2||*

*தி3க்3வாரணஸூஹ்ரு1த்கீர்திராஜிதம் ஸங்க3வர்ஜிதம் |*
*காமாதி3த்3விபபஞ்சாஸ்யம் ப4ஜே ப4ர்கா3ர்சநோத்ஸுகம் ||3||*

*மாத4வோமாத4வாபே4த3தி4ஷணம் பி4ஷஜம் கலே: |*
*ப்ரஜ்ஞாநிதி4ம் நமஸ்யாமி கூ3ட4தத்த்வாவபோ3த4கம் ||4||*

*ஶமாதி3ஸுகு3ணஸ்தோமபூ4ஷிதம் யமிநாம் வரம் |*
*யோக3மார்க3ரதம் நௌமி யோக3க்ஷேமக்ரு1தம் ஸதா3 ||5||*

*வித்3யாம் விஜ்ஞாவலிர்வக்தி விமலாம் யம் வபுஷ்மதீம் |*
*விபூ4த்யை வசஸாம் வந்தே3 விநீதோ விஶ்வவந்தி3தம் ||6||*

WWW.SRINGERI.NET

***ஶ்ருதிஸ்ம்ரு$_1$திஸதா$_3$சாரபரித்ராணவிதௌ$_4$ பு$_4$வி |***
***ப்ரபூ$_4$தாம் ப்ரபு$_4$தாம் த$_4$த்தே யஸ்தம் ஸம்ஸ்தௌமி ஸந்ததம் ||7||***

***யத்$_3$வாக்$_3$ஜ$_2$ரீ ஸூபர்வாத்$_4$வதரங்கி$_3$ண்யவதீ$_4$ரிணீ |***
***ஸஞ்சாரபூதத$_4$ரணி: பாத்வாசார்யஶிரோமணி: ||8||***

***அநந்தோ(அ)பி ஹ்ரு$_1$தா$_3$காஶே த$_3$ஹரே பா$_4$ஸதேதராம் |***
***ஈடே$_3$ ஶ்ருதிஶிரோவேத்$_3$யம் பரிபூர்ணம் கு$_3$ரூத்$_3$வஹம் ||9||***

***ராஜாதி$_4$ராஜஸம்ஸேவ்யம் ராஜவித்$_3$யாகு$_3$ரும் ஶ்ரயே |***
***ஶிஷ்யாலிவந்த்$_3$யபாதா$_3$ப்$_3$ஜம் பா$_4$ரதீதீர்த$_2$தே$_3$ஶிகம் ||10||***

WWW.SRINGERI.NET


WWW.SRINGERI.NET